# ஆத்மஜோதி



பாரதியாரின் ஞானகுரு

யாழ்ப்பாணத்துச் சாமி

அருளம்பலம்.

# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாதவெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

—சுத்தானந்தர்.

| ஜோதி 15 | சுபகிருது௵ வைகாசி மீ 1௨ (15-5-63) | சுடர் 7 |
|---|---|---|

## பொருளடக்கம்

1. பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழ் 241
2. சான்றோர் 242
3. பாரதி யார்? 243
4. ஸந்நிதானத்தில் ஒருநாள் 245
5. பாரதியாரின் ஞானகுரு 253
6. தூண்டு தவ விளக்கனையார் 261
7. யாழ்ப்பாணத்துச் சாமி அருளம்பலம் 265
8. கடோப நிஷதக் கருத்து 267
9. ஆனந்தமாயி அம்மையிடம் அன்பர்கள் சம்பாஷணை 271
10. முத்தீச் செல்வம் 277
11. கருணை செய்வாய் கந்தனே (அட்டை 3ம் பக்கம்)

## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ.3—00.

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- திரு. க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- திரு. நா. முத்தையா

“ஆத்மஜோதி நிலையம்” நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண்:- 353.

# பாரதியாரின் ஞான குரு

## யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழ்

*(பாரதியார்)*

கோவிந்த சாமிபுகழ் சிறிது சொன்னேன்;
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்,
தேவிபதம் மறவாத தீரஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்று ஞானத் தோணி
பரமபத வாயிலெனும் பார்வை யாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயுங்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்.

தங்கத்தாற் பதுமைசெய்தும் இரத லிங்கம்
சமைத்து மவற் றினிலீசன் தாளைப் போற்றும்
துங்கமுறு பக்தர் பலர் புவிமீ துள்ளார்;
தோழரே! எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர்கோன், யாழ்ப்பாணத் தீசன்றன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி.

*குவளைக் கண்ணன் புகழ்*

யாழ்ப்பாணத் தையனையென் னிடங் கொணர்ந்தான்
இணையடியை நந்திபிரான் முதுகில் வைத்துக்
கர்ழ்ப்பர்ன கயிலைமிசை வாழ்வான், பார்மேல்
கனத்தபுகழ்க் குவளையூர்க் கண்ணன் என்பான்,
பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன்;
பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்;
தீர்ப்பான சுருதிவழி தன்னிற் சேர்ந்தான்
சிவனடியார் இவன்மீது கருணைகொண்டார்.

# சான்றோர்

அறம் என்றும் இன்பம் என்றும் இரண்டு பொருட்கள் உள. சான்றோர் இன்பத்தை விட்டு அறத்தையே கொள்வர். அறிவில்லாதவர் ஐம்புலஇன்பத்தை நாடுவர். நாடி மரணத்தின்வலையில்வீழ்வர். அறிஞர் நிலையற்றவற்றை நிலையின என்று கருதார்.

— உபநிடதம்.

எவன் மனத்தூய்மை, அடக்கம், அறிவு உடையவனோ, எவன் மனத்தில் செருக்கும் தீமையும் இல்லாதவனோ, அவனே சான்றோன். எவன் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவனோ, அவன் சான்றோன். எவன் தான் தவறு செய்யாதிருந்தும் பிறர் பழிச் சொல்லைப் பொறுத்துக் கொள்கின்றானோ அவன் சான்றோன்.

— புத்தர்.

அடக்கமுடையவன், பிறரை இகழாதவன், சினத்தைப் போற்றாதவன், செருக்கில்லாதவன், பிறரிடம் குற்றம் காணாதவன், புறங் கூறாதவன் - இவனே சான்றோன்.

— ஜைன மதம்.

சான்றோர் போற்றுவன மூன்று பொருட்கள்; கடவுள் கட்டளை, பெரியோர், அறிஞர் அறிவுரைகள். சான்றோரிடம் காணப் படாதவை நன்கு; ஆராயாமல் வெறுத்தல், ஆதாரமின்றி முடிவு செய்தல், பிடிவாதம், ஆணவம். சான்றோர்க்குரிய பட்டம் சான்றோர் எனப்படுவதே.

— கன்பூஷிய மதம்.

சான்றோர் துன்பம் நேரினும் சோர்வுறார். நன்மை செய்யினும் புகழ் விரும்பார். தம்முடைய இதயத்தை மனித குலத்துக்குரிய தாக்குவர். தங்களைப் பார்த்த மாத்திரத்தில் மக்கள் தந்தை தனயன் போல் நடப்பர். சான்றோர்க்குப் பகைவரிலர். சான்றோர்க்குத் தாழ்ந்தவர் என்பவர் கிடையார். சகலரும் அவருடைய அன்புக்கு உரியவர்.

— தாவோ மதம்.



# பாரதி யார்?

(ஆசிரியர்)

பாரதி யார் என்ற சொல்லுக்குப் பக்கத்திலே ஒரு வினா அடையாளம் இடப்பட்டால் எல்லாரும் ஒரு விடை இறுக்க மாட்டார்கள். பாரதியாரின் கவிதைகள் மூலம் ஒவ்வொருவர் ஒவ்வொரு கோணத்திலே நின்று பார்த்துள்ளார்கள். இன்று நாம் பாரதியாரைப் பார்க்க வேண்டுமானால் அவர் எழுதிய பாடல்களுக் கூடாகத்தான் பார்க்க வேண்டும். அவர் மக்களுக் களித்த பிரசாதம் அவர் எழுதிய பாடல்கள். அவர் எழுதிய பாடல்கள் அத்தனையும் மக்கள் வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகும். பாரதியார் வாழ்வையே படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்றால் மிகையல்ல. இறைவனின் இருப்பைச் சொல்ல வந்த திருமூலர்

பூதக் கண்ணாடியிற் தோன்றிலன் போதுளன்
வேதக் கண்ணாடியில் வேறே வெளிப்படுமே
நீதிக் கண்ணாடி நினைவார் நெஞ்சுளன்
கீதக் கண்ணாடியிற் கேட்டிருந்தேனே

என்கின்றார். முகத்துக் கண்ணே பூதக் கண்ணாடி. முகத்துக் கண் கொண்டு பார்ப்பவர்களை மூடர்கள் என்றே கூறுகின்றார். இறைவனை முகத்துக் கண் கொண்டு பார்க்க முடியாது என்கின்றார். ஏன் என்றால் அவன் இருக்குமிடம் அகமாகும். அகத்திலிருப்பவனை அகத்துக் கண் கொண்டு பார்த்தா லல்லவா ஆனந்தம். அங்ஙனம் பார்த்தால் வேறாக வெளிப்படத் தோன்றுவான் இறைவன். இறைவனைத் தத்துவ ஞான மூலமாக நினைந்தால் நினைப்பவர் மனத்துள்ளேயே இருக்கின்றான். இங்ஙனம் ஞானக் கண் பெறாதவர்கள் அதனைப் பெறும்வரை கீதக் கண்ணாடியில் இறைவனைக் கேட்கலாம் என்கின்றார் திருமூலர். கீதம் என்பது இசை அல்லது பரம்.

இதே வகையில் பாரதியாரை அவர் எழுதிய பாடலாகிய கண்ணாடியைப் போட்டே பார்க்க வேண்டும். அப்போதான் பாரதி யார்? என்ற வினாவுக்கு விடை வரும். பாரதியார் வரகவியா? தேசீய கவியா? தெய்வீகக் கவியா? தமிழ்க்கவியா என்று சர்ச்சைகள் எழுப்புவதைப் பார்க்கின்றோம். எல்லாம் சேர்ந்தவரே பாரதியார். உணர்ச்சி

மிகுந்தவர், பக்தி மிகுந்தவர் பாரதியார். எதன் மீதும் பக்தி உண்டாகா விட்டால் உணர்ச்சி வெளிப்படவே வெளிப்படாது. தேசத்தை ஆதிபராசக்தியாகப் பக்தி செய்தார். தமிழைத் தமிழ்த் தேவியாகப் பக்தி செய்தார். அதனால் உணர்ச்சி மிகுந்தது. ஆவேசப் பாடல்கள் பொங்கி வழிந்தன. பாரதியார் வேண்டுமென்று பாடவில்லை. பாடாமல் இருக்க முடியாமையினாலே பாடினார். ஆனபடியினால் தான் அப்பாடல்களிலே ஒரு அருள் ஆவேசத்தைக் காண்கின்றோம்.

பாரதியார் உலகத்தை அகத்துக் கண்கொண்டு பார்த்தார். அவர் எவரையும் வெளித் தோற்றத்தைக் கொண்டு மாத்திரம் மதிக்கவில்லை. அகத்துக் கண்கொண்டே பார்த்தார். தேசீயத்திலோ தமிழிலோ இடம்பெறாத எத்தனையோ மகான்கள் அவருடைய கவிகளிலே இடம் பெற்றிருக்கின்றார்கள் என்றால் அது அவருடைய அடியார் பக்தியைக் காட்டுவதாகும்.

அருளம்பலம் சுவாமிகள் என்று யாழ்ப்பாணத்தவர்களால் அழைக்கப்பட்டு வந்த மகானைப் பாரதியார் யாழ்ப்பாணம் சுவாமிகள் என்று பெயர் சூட்டிக் கொண்டாடியிருக்கின்றார். அம்மகானைப் பாரதியார் குறிப்பிடும்போது குவலயத்தின் விழிபோன்றயாழ்ப்பாணத்தான் என்கின்றார். உலகத்திற்கே கண்போன்றவர் எனும்போது அம் மகானின் ஆத்ம ஒளியின் மகிமைதான் என்னே!

**தேவிபதம் மறவாத தீரஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்**

நடராஜப் பெருமானே இவ்வுருவில் வந்துள்ளார் என்பதுதான் பாரதியாரின் முடிபு. ஞானிகள் மூலமே இறைவனைக் கண்டார், அநுபவித்தார் பாரதியார் என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும்.

**பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி**

இது ஞானிகளுடைய இலட்சணங்களுக் குள்ளே மிக முக்கியமானதொன்று. நாம் உய்த்துணர்ந்து அனுபவிக்க வேண்டியதொன்று.



சுவாமி இராமதீர்த்தர் எளிய பொருள் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். சகலமான பேர்களும் இந்தப் பொருளை மிகத் தாராளமாகக் கொடுக்க முன்வருவார்கள்; ஆனால் இதையே பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வதை எவருமே விரும்புவதில்லை. அந்தப் பொருள் என்ன?

அதுதான் உபதேசம் அல்லது அறிவுரை.

பாரதியார் ஊருக்கு உபதேசி மாத்திரமல்ல. பல மகான்களின் உபதேசத்தினால் தமது அறிவை ஞானவளம் படுத்திக் கொண்டவர்.

புதுவையில் புகுந்த பாரதி வேறு; புதுவையிலிருந்து வெளிவந்த பாரதி வேறு. உள்ளே புகுந்தவர் வீரர்; வெளியே வந்தவர் ஞானி. பாரதியாருக்குத் தேசப் பிரஷ்ட வாழ்வும், கஷ்ட ஜீவனமும், நஷ்ட நம்பிக்கையும் அறிவை வளர்க்கும் சாதனங்களாக உதவின. கல்லூரியில் கற்காததைக் கடற்கரையில் கற்றார். புதுவையில் கடற்கரையில் பல புதுமைகள் உதித்தன. புதுவையிலேதான் பாரதியாருக்கு அரவிந்தர், யாழ்ப்பாணத்துச் சுவாமி போன்ற மகான்களின் தரிசனம் கிடைத்தது. மகான்களின் தரிசனத்தினால் பாரதியார் ஞானவீரரானார். இயற்கையிலிருந்து செயற்கையை அறிந்தார். மனிதவாழ்வின் மூலமந்திரத்தை அறிந்தார். சம பாவம் பிறந்தது; நிஷ்காமம் தொடர்ந்தது. வீரம் வைராக்கியமாக மாறிற்று. தர்மம் சேவாஸ்வரூபம் பெற்றது. பாரதியார் இவ்வுலகை விட்டு மறையும்போது பழுத்த ஞானியாகவே மறைந்தார். அதற்கு அவரது மறைவின் காரணமே சாட்சி.

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட்டுடையார் எவர் தலைவர்**
**அன்னவர்க்கே சரண் நாங்களே.**

— கம்பர்

# ஸந்நிதானத்தில் ஒருநாள்

[கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்]

### பகவான் நரசிம்ம பாரதிகள்

ஸ்ரீசிருங்கேரி ஆசார்யாளுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1909ல் பகவான் நரஸிம்ஹ பாரதியாரே என்னைக் ''கவியோகி பாரதி'' என்று அழைத்தவர். அவர் வாக்கிலிருந்து வந்த பட்டம் நிலைத்துவிட்டது. அவரே எனக்கு சிறந்த மந்திரங்களை உபதேசித்து என் வாழ்விற்கு வழி வகுத்தார். அவர் அந்தக்காலம் தமது சாரதா ஸ்தோத்திரத்தைப் பாடினார். அதில் ஒன்று இன்னும் என் செவியில் ஒலிக்கிறது.

நவநவ கவந ஸமர்த்தம் படுதர வாக்ஜாத வாஸ்வாசார்யம்/
வனஜாஸந வரமாநினி வரதே குரு சிக்ரமங்க்ரிநதம்//

புதுப்புது அருட்கவிகள் அன்று முதல் என் உள்ளத்திற் பூத்து வாக்கில் மணந்தன.

### பகவான் சந்திரசேகர பாரதிகள்

பதினைந்து ஆண்டுகள் கழிந்து அடுத்த பெரியவாள் ஸ்ரீ சந்திரசேகரபாரதிகளை 1924ம் ஆண்டு நான் அரசியற் சுழலில் ஈடுபட்டிருந்த சமயம் தரிசித்தேன். அவர் விவேக சூடாமணியிலிருந்து ஒரு சுலோகம் அருளி விளக்கினார்.

கடாகாசம் மஹாகாச இவாத்மானம் பராத்மனி/
விலாப்ய அகண்ட பாவேன தூஷ்ணீம் பவ ஸதாமுனே//

ஒரு குடத்திலுள்ள சிறிய ஆகாசத்தை [வெளியை] மஹாகாசத்துடன் [பரந்த வெளியுடன்] சேர்ப்பது போல் பரமாத்மனில் தேஹாத்மனை ஜீவாத்மனை ஆழ்த்து. அவ்விதம் ஆழ்த்தி அந்த அகண்ட ப்ரஹ்மமாக அமைதியாக மௌனமாக இரு. அதுவே இன்ப நிலை.

இந்த ஒரு வாக்கு சுயராஜ்யாவிலிருந்து என்னைச் சூறாவளி போல் அடித்துச்சென்று பகவான் ரமணமஹரிஷிகள் முன்னிலையில் சேர்த்து விரூபாக்ஷி குகையில் புகுத்தியது. இருபத்தைந்து ஆண்டுகள் மௌனத்தில் மகாதுரீய ஸமாதியில் ஆழ்ந்து சித்திபெற்று உலகையும் மூன்றுதரம் சுற்றிச் சென்னையில் யோக சமாஜம் கண்டு சதா சகஜ மகா துரிய சமாதியிலிருந்த காலத்திலேதான் தற்போதுள்ள மஹா ஸந்நிதானத்தின் தரிசனம் கிடைத்தது. எனக்கு சங்கல்ப விகல்பங்கள் இல்லை. பகவத் அனுக்ரஹத்தால் எல்லாம் நடக்கிறது. அந்த மஹா அனுக்ரஹத்தால் சிருங்கேரி மணிகளான இரண்டு பக்தர்கள் வந்தனர். ஒருவர் ஸ்ரீ வெங்கடராம ஐயர், மற்றொருவர் ஸ்ரீ பஞ்சாபகேச ஐயர். இருவரும் எனக்கு சிருங்கேரி மஹா ஸந்நிதானத்தின் அருமை பெருமைகளைச் சொல்லி சங்கர கிருபாவும் தந்தனர். மஹா ஸந்நிதானத்தைப் பார்க்கவும் அவர்களே ஏற்பாடு செய்தனர். இது பகவான் கட்டளை என்று பார்க்க முனைந்தேன். அப்போது சில கவிதைகள் உதித்தன. அவற்றையும் எழுதிக்கொண்டு சென்றேன்.



### ஆசாரியாள் தரிசனம்

திருவல்லிக்கேணியில் ஆசாரியாள் எழுந்தருளியிருந்தார்கள். தை வெள்ளிக்கிழமை—மாலை நான்கு மணி. அன்பர் உள்ளே அன்புடன் அழைத்துச் சென்றனர். பகவான் வித்யா தீர்த்தர் கம்பீரமாக வித்வான்களிடையே அமர்ந்திருந்தார்கள். முன்னவர்களுடன் தெலுங்கில் பேசினேன்—இவர்களுடன் இந்தியில் பேசினேன். அவர்கள் அழகான இந்தியில் அரிய விஷயங்களைச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் எழுதி வந்த பாடல்களைப் படித்து இந்தியிலும் விளக்கினேன்.

தேனினும் இனிய சொல்லான் தீச்சுடர் போன்ற தூய
ஞானி என் குருவாய் வந்த நரசிம்மனிடத் தமர்ந்த
கோனிவன் இதயமான குகையினில் ஒளிரப்பெற்றேன்
ஏனினிக்கவலை;யான்செய் தவமெலாம் பலித்ததின்றே
சிலைதரு சிற்பிபோல சிந்தனைச் சிற்பியாகிக்
கலைபெற ஞான தீரர் கணத்தினைக் கணத்திற் கூட்டி
மலையருவியைப்போல் அன்னார் மாமறை வழங்கும் இன்ப
நிலைபெற வேண்டியிங்கே நிலைதவம் புரிகின்றேனே.

என்று நான் பாடியதும் ஆசார்யாள் தனிச் சம்பாஷணை தொடங்கினார்.

## அத்யாத்மசிங்கம்

ஆசார்யார் கம்பீரமான இளம் பொலிவுள்ளவர். அஞ்சா நெஞ்சு படைத்த அத்யாத்மசிங்கம். சந்திரசேகர பாரதியாரிடம் இருபதாண்டுகள் இருந்து பழகினவர் என்றால் வேறு விரிவுரை தேவையில்லை. சந்திரசேகரர் பரமயோகி, தியான சீலர்; அனாத்ம சிந்தனையை வேரறுத்த முனிவர். அவரது சைதன்ய சக்தி இவர் உள்ளத்தில் துடிக்கிறது. பாஷ்யங்களிலும் ஆர்ஷ கிரந்தங்களிலும் விசேஷமான பயிற்சி உள்ளவர். அத்துடன் காலப்போக்கை நன்றாக அறிந்து நடக்கிறவர். அவருக்கு வைதிகமும் தெரியும் லௌகிகமும் தெரியும். இகமும் தெரியும் பரமும் தெரியும். சிருங்கேரி பீடத்தில் அமர்ந்த சிங்கம் வித்தியாதீர்த்தர். என் உள்ளத்தில் துடிக்கும் கருத்துக்களை அன்று மூன்று மணி நேரம் பெரிய கூட்டத்தில் பேசினேன். ஆசாரியாள் முன்னிலையில் பேசும் பாக்கியம் கிடைத்ததே பெருமகிழ்ச்சி.

## என் ஆர்வம்

நான் அறுபது ஆண்டுகள் செய்த தவயோகத்தின் கருத்தெல்லாம் சனாதனமான ஹிந்துதர்மம் உலகெல்லாம் பரவிப் பொலிய வேண்டும் என்பதே. அதற்கேற்ற வேதாந்த அறிவாளிகளைப் பயிற்ற வேண்டும். உலகெங்கும் அவர்கள் சென்று நமது பாரத தர்மத்தைப் பிரசாரம் செய்ய வேண்டும். புத்தர் சிலையை உலகெங்கும் நாட்டுவது போலவே ஆதி சங்கரர் சிலையை ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு தெருவிலும், ஊரிலும், நாட்டிலும், உலகிலும் நாட்டி அவர் பெயரால் பாரத வேதாகமதர்மங்களைப் பரப்ப வேண்டும்என்றஆர்வத்தை அன்று ஆசார்யாளிடம் தெரிவித்தேன்.

**அன்பிலே ஆழ ஊன்றி அழகிய மலர் குலுங்கிப்**
**பொன்பழுத் தமுத மூறும் பூரண வேதாந்தத்தின்**
**பண்புகள் பரவியிந்தப் பாரெல்லாம் அமைதி சேரும்**
**இன்பநாள் கண்டபோதே என்னுயிர்க் கின்பமாமே!**

**ஆசாரியாள்:—** இது உயர்ந்த எண்ணம். இதற்காகத்தான் சங்கர சேவா சமிதி ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலும் மடம் ஏற்பட்டு சேவை நடக்கிறது. நூல்கள் வெளி வருகின்றன. உங்கள் சேவை வேண்டும்.



**நான்:—** எல்லாம் நலமே. ஆனால் இந்தப்பாரதபூமியில் ஆதியில் எல்லாரும் வேதாகம சீலர்களாகவே இருந்தனர். இன்று பார்த்தால் கோடிக்கணக்கான மக்கள் பரமதம் புகுந்து நமக்கே விரோதிகளாயிருக்கிறார்கள். விடிந்தெழுந்தால் பரமதப் பிரசாரகர் ஆயிரக்கணக்காக, கிராமம் கிராமமாகச் சென்று பாமர மக்களை மாற்றுகின்றனர். தினம் 2000 பேர் மதம் மாறுகிறார்கள். வேதம் ஆகமம் எல்லாம் சில பண்டிதர்களிடம் உயிர் துடிக்கின்றன. சாதாரண மக்களுக்கு நமது சமய ஞானமோ, தத்துவமோ தெரிவதில்லை. ஒரு கிறிஸ்தவனுக்கு பைபிள் தெரியும், ஏசுநாதர் சரித்திரம் தெரியும், கிறிஸ்துவின் உபதேசம் தெரியும், ஞாயிறுதோறும் சர்ச்சுக்குப் போகத் தெரியும், தினம் சிலுவை முன் முழந்தாள் பணிந்து பிரார்த்தனை செய்யத் தெரியும். சூரியன் உதிக்கும் போது ஆயிரக்கணக்கான பிரசாரகர் தமது சமயத்தைப்பரப்பக் கிராமம் கிராமமாகச் செல்கின்றனர். அதே மாதிரி பௌத்தமதத்திலும் இஸ்லாம் மதத்திலும் பலர் வேலை செய்கிறார்கள்; பள்ளிக்கூடங்களும் வைத்தியசாலைகளும், அனாதை இல்லங்களும் வைத்து ம்க்களிடம் தமது மதத்தைப் பரப்புகிறார்கள். ஆதிசங்கரர் குமரிமுதல் இமயம் வரையில் காலால் நடந்து வேதாந்த முழக்கம் செய்தார். அதே மாதிரி வேத வேதாந்தத்தைப் பரப்பிப் பொது மக்களுக்கு விழிப்புண்டாக்கி ஹிந்து தர்மப்பிரசாரம் செய்ய நாமும் தொண்டர்களைத் தயார் செய்ய வேண்டும். இது தான் இப்போது அத்தியாவசியமான சேவையாயிருக்கிறது. மஹாசந்நிதானம் மனதுவைத்தால் நடக்காததில்லை.

**ஆசாரியாள்:-** இது யுக்தமான சேவை. இப்போது சங்கர ஞானம் நாடெங்கும் பரவ ஆங்காங்கு பக்தர்கள் கைங்கரியம் செய்கிறார்கள். இருட்டை விரட்ட வெளிச்சம் வேண்டும். மனத்தில் படர்ந்த அஞ்ஞானம் விலக ஞானவொளி வேண்டும். முதலில் படிக்கத் தெரிந்தவர்களுக்கு வேதாந்த ஞானம் ஆழப்பதிய வேண்டும். அதற்குப் பகவத்பாதாள் வேண்டிய கிரந்தங்களை அருளியிருக்கிறார்கள். அவற்றை வெளியிட்டுப் பரப்புகிறோம். அவற்றைக் கற்று ஆர்வம் இருப்பவர் முன்வந்து சாதனம் செய்து சமம், தமம், திதிக்ஷை, உபரதி, சிரத்தைமுமுக்ஷுத்வாதி சம்பத்துக்கள் அடைந்தால் போதும். அவர்கள் மூலம் சமயம் பரவும்.

**நான்:—** மிக உயர்ந்த கருத்து; நமதுதர்மம் வற்புறுத்தி மதம் மாற்றுவதில்லை; மனமாற்றமே நமது குறிப்பு, மத

மாற்றமல்ல உண்மை அறிவு பரவ வேண்டும். அதற்கு என்ஞல் ஆகிய சேவையை சந்நிதானத்தில் நிவேதிக்கிறேன். நான் இதோ ஜப்பான் அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்கிறேன். அடுத்த ஆண்டு இங்கிலாந்து பிரான்ஸ் தேசங்களுக்குச் செல்வேன். இரண்டு முறை உலகைச் சுற்றியிருக்கிறேன். மேற்கும் கிழக்கும் வேத வேதாந்தத்தை வரவேற்கின்றன. ஆஞல் பைபிள், குரான், புத்த தர்மம்போல நமக்கு நிர்ணயமான ஒரு புனித நூலை உண்டாக்கி — இதுதான் எங்கள் சமய நூல், இதுதான் ஹிந்து தர்மம், இதைத்தான் நாங்கள் பின்பற்றி வாழ்கிருேம். இதுதான் மானவ ஜீவனத்திற்கு வழிகாட்டி என்று ஒரு நூலைக் கோத்து உலக மொழிகளிலெல்லாம் அது உலாவச் செய்ய வேண்டும். மற்ருென்று சங்கரபகவத்பாதாள் சரித்திரத்தை இனிய எளிய நடையில் எழுதி எல்லாரும் படிக்கச் செய்ய வேண்டும். மூன்ருவது சங்கரப்பிரபாவத்தை கதாகாலக்ஷேபத்திற்கு ஏற்றபடி இனிய கீர்த்தனை வடிவில் ஆக்கி ஆங்காங்கு சங்கீத உபந்யாசங்களை ஏற்பாடு செய்யவேண்டும். அக் கீர்த்தனையில் பகவான் சங்கரரின் உருக்கமான பாடல்களைப் பெரிதும் சேர்க்க வேண்டும். இந்த மூன்று கைங்கர்யங்களையும் நிறைவேற்ற பகவத்பாதாள் ஆசீர்வாத பலம் வேண்டும்.

1. சங்கரவிலாசம்;— (பகவத்பாதாள் ஜீவன சரித்திரம்)
2. சங்கர சங்கீர்த்தனம்:— (சங்கர வாக்குகளுடன் கீர்த்தனை வடிவில் பகவத்பாதாள் சரித்திரம்.)

3. வேதாந்த தீபிகை:— (அத்வைத மதத்தின் தொகுப்பு நூல்)

இந்த மூன்றையும் முதலில் தமிழில் செய்து வெளியிட்டுப் பிறகு ஆங்கிலம் இந்தி தெலுங்கு முதலிய மொழிகளிலும் ஆக்கவேண்டும்.

இந்தமாதிரி நூல்கள் தவத்திஞலேதான் வரும். சிருங்கேரியில் சிலமாதங்கள் தவம் புரிந்து வேதாந்த தீபிகையை எழுத விரும்புகிறேன்.

ஆசாரியாள்:— (அச்சா ஐஸா கர்ஞ சாஹியே) நல்லது அப்படியே செய்ய வேண்டும். சிருங்கேரிக்கு வந்து உசிதம் போல் இருக்கலாம்.



இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசினேம்.

## பீடத்தின் பெருமை

ஆசார்யாள் அபாரமான அறிவும் அருளும் நிரம்பியவர்; காலத்திற்கேற்றவாறு அறிவைப் பரப்பும் ஆர்வம் கொண்டவர். இந்த மஹான் பீடத்திற்கு வந்த பிறகு சங்கர மடங்கள் பல கிளை பரவிப் புது விழிப்புடன் அரிய காரியங்களைச் செய்கின்றன. மகா சந்நிதானத்தைக் கண்டதும் எனக்குத் தோடக விருத்தம் நினைவிற்கு வந்தது.

**பவதா ஜனதா ஸுஹிதா பவிதா நிஜபோத விசாரண சாரு மதே**
**கலயேச்வர ஜீவ விவேக விதம் பவ ஸங்கர தேசிகமே சரணம்//**
**மெய்யறிவறிந்த துய்யறிவோனே மாந்தர் நின்ஞல் மங்கல மெய்தினர்**
**வச ஞானந்திகழச் செய்வாய் காவாய் சங்கர குருவே சரணம்**

ஆசாரியாள் அருளியது போல முதலில் ஆஸ்திகர்களுக்கும் படித்தவர்களுக்கும் நமது சமய ஞானம் உறுதியாக வேண்டும். பிறகு பக்குவத்திற்கேற்றபடி அதை எளிய நடையிலும், பாடல்களிலும் பொதுமக்களுக்குப் பரப்ப வேண்டும்.

## பிரம்மஞானம்

உள்ளத்தை அள்ளும்படியான அற்புத வாக்குகள் சங்கர பகவான் இதயத்திற் பூத்து இன்றும் ஞானமணம் வீசுகின்றன. ஆத்ம போதத்தில் ஒரு வாக்கைக் காண்போம்.

**தத்யுக்தமகிலம் வஸ்து வ்யவஹாரஸ்தன்வித:/**
**தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம க்ஷீரே ஸர்பிரிவாகிலே//(சு.59)**

பிரம்மம் ஒன்று; அது சச்சிதானந்தம்; எல்லாப் பொருள்களும் அந்தப் பரப்பிரம்மத்துடன் கூடியவை; எல்லா விவகாரங்களும் அதைச் சுற்றித்தான் நிகழும். அஃதின்றி எதுவுமில்லை. பால் முழுதும் நெய் பரவியிருப்பது போலப் பிரம்மம் எங்கும் பரவியுள்ளது.

பாலில் நெய் உள்ளது. ஆனால் அதை எப்படிக் காண்பது? பாலைக்காய்ச்சி, உறைகுத்தி அப்படியே வைத்து காலையில் கடைந்தால் வெண்ணெய் வரும்; அதை உருக்கினால் நெய் ஆகும். அதுபோல மனித ஜீவன் பால்; அதற்குள் உறைந்த பரமாத்மப் பிரம்மத்தை அடைய வேண்டும்; எப்படி? முதலில் அதைக் குரு கைங்கர்யத்தில் காய்ச்ச வேண்டும். அருளால் சூடேற வேண்டும்; சூடு சமமாக வேண்டும். அதன் பிறகு தத்வமஸி (அது நீ) என்ற மஹாமந்திரத்தை உறைகுத்த வேண்டும். உறைகுத்தின மனம் சலிக்காது சமதமதிதிக்ஷாதி நிலைக்க தனித்திருந்து நிதித்யாசனம் செய்ய வேண்டும். தக்க காலத்தில் தியானத்தால் பிரணவத்தால் கடைந்தால் ஆத்ம போதமான வெண்ணெய் வரும்; அதை மஹா குண்டலினிக் கனலில் உருக்கியதும் கம கம வென்று வாசனை வீசும் நெய் ஆகும். அரணி கடைந்து ஆத்மத்தீ பற்ற வேண்டும். தேகத்தை விறகாக்கி, பிரணவத்தைக் கொண்டு தியானத்தால் கடைந்து பிரம்மச்சுடர் கொளுத்த வேண்டும். இப்போது அரணி கடையும் காலம். ஜடமான யூரேனியத்திலிருந்தும் ஹீலியத்திலிருந்தும் மகத்தான சக்தி புறப்பட்டு உலகில் அற்புதம் செய்கின்றன. சித்தான ஆத்மாவை தியானமான ஸைக்ளோட்ரோனில் (அணுமுறி யந்திரம்) சுழற்றினால் சுத்த பரமாத்ம சக்தி புறப்படும். அதனால் அதி அற்புதமான சேவை செய்யலாம். உலகெல்லாம் அந்த ஞானவொளி பரவினால் பிறகு யார் யாரை வெறுப்பது; யார் யாரைப் பொருதுவது? எங்கும் அன்பும், அறிவும், அருளும் பொங்கிப்பொலியும். உலக சமாதானத்திற்கு ஒரே வழி பாரதநாட்டு யோக வேதாந்த ஞானத்தை எங்கும் பரவச் செய்வதுதான்.

தவயோகிகள் அடக்கமாக அமைதியாக அத்யாத்ம மின்சார நிலையங்கள்போல் ஆங்காங்கு தவம் புரிய வேண்டும். அவர்களுடைய அருள் மின்சாரத்தைப் பிடித்துக் கொண்டு தக்க வித்துவான்கள், வேத வேதாந்த தத்துவப் புலவர்கள் நாடெங்கும் அறிவுப்பணி புரிய வேண்டும். இந்தப் பணி செய்யத் துணிவுள்ள தொண்டர் வருக! வருக!

**ஓம் தத் ஸத்**



# பாரதியாரின் ஞான குரு

(புலோலி மேற்கு — பொ. சபாபதிப்பிள்ளை)

'யாழ்ப்பாணத்துச் சாமி' என்று கவி சுப்பிரமணிய பாரதியார் புகழ்ந்து பாடிய தவ சிரேஷ்ட மகான் இலங்கையில் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு வியாபாரிமூலை என்னும் இடத்தில் உத்தம வேளாள குலத்தில் பிறந்தவர். இவருடைய தந்தை சின்னையா **வேலுப்பிள்ளை** முதல் தாரமாகச் செல்லம் என்னும் பெண்ணை விவாகம் செய்து கொண்டார்; இவர்களுக்குப் பிறந்த மகளின் பெயர் காமாட்சி அம்மாள். செல்லம் காலம் சென்ற பின்பு கரவெட்டி வடக்கு வதிரிக் குறிச்சி வேளாண்மையைச் சேர்ந்த ஆறுமுகத்தின் மகள் லட்சுமி என்னும் பெண்ணை வேலுப்பிள்ளை மணந்து பெற்ற மக்கள் அருளம்பலம், பொன்னாச்சி என்னும் இருவர். இந்த அருளம்பலத்தைத்தான் 'யாழ்ப்பாணத்துச் சாமி' என்று சுப்பிரமணிய பாரதியார் புகழ்ந்து பாடியிருக்கிறார். அருளம்பலம் சிறு பிராயமாக இருந்தபோதே தந்தையார் காலம் சென்று விட்டார்.

அருளம்பலம் 1878-ஆம் ஆண்டளவில் அவதரித்தார். இவர் இந்த நாளில் மேலைப் புலோலி சைவ வித்தியாசாலை என்று குறிக்கும் தம்பசிட்டிப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று வந்தார். அப்படிக் கல்வி கற்கும் காலத்தில் மகா வித்துவசிரோமணியான சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் அந்தப் பாடசாலையில் உபாத்தியாயராக இருந்தார். (அப்போது, கதிரைவேற்பிள்ளை சாதாரண மனிதர்). பள்ளியில் நம் அருளம்பலம் ஒரு விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்தார். எதிலும் தர்க்கந்தான்; எவரோடும் சேர்வதில்லை.-தனிப் பிறவி. ஆனால் வித்துவசிரோமணி கதிரைவேற்பிள்ளை அவர்களின் நண்பராகி அவரோடு மட்டும் கூடித் திரிவார்.

இவர் பாடசாலையை விட்டபின் சில காலம் ஊரில் இருந்தார். தம்முடைய தந்தை வழிப் பாட்டி காளியம்மை என்னும் மூதாட்டியின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். தம் இனத்தாரான பரமப்பிள்ளை என்பவருடன் சிலகாலம் கம்பளையில் கடையிலே இருந்தார். பின்பு கம்பளையை விட்டு வியாபாரி மூலைக்குத் திரும்பி வந்தார். தாமே தனியாக ஒரு கடை வைத்து வியாபாரம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். தம்முடைய காணிகளை ஈடு வைத்தும் விற்றும் பணந் திரட்டினார்.

வியாபாரம் செய்ய மட்டக்களப்புக்குப் போனார். அங்கே வியாபாரம் செய்யுங் காலத்தில் இவருடன் இருந்தவர் இவரை ஏமாற்றியதாலும், இவருடைய விளையாட்டுத் தனத்தாலும் அதிக நஷ்டம் வந்த நிர்ப்பாக்கிய நிலையில் நோயும் பீடிக்கவே, பல ஸ்தலங்களுக்கும் சுற்றியாடித் திரிந்துவிட்டு ஓர் உன்மத்தனைப் போல் துறவுக் கோலத்துடன் வியாபாரி மூலைக்குத் திரும்பினார். இதை இவர் பிற்காலத்தில் பாடிய நீலலோசனி அம்மை ஊஞ்சலில் 16 - ஆம் பக்கத்தில்

சுட்டபணிகார மெல்லாம்
 சுமையாக வந்திறங்க
மட்டக்கிழப்பதனில்
 வாங்கிய புண்ணென்றாரே

என்றும், அருவாச தேவாரம் 3 - ஆம் பதிகத்தில்

நோன்பெலாங் கொண்டே யாடி
 நோய்கொண்டே தேக மெங்கும்
மான்படு புள்ளி போல
 வடுக்கொண்டே வருத்த முற்றேன்;
வான்படு முனதுசேவை
 வழிநடைப்படி நடந்தேன்
ஏன்பட்டே னிந்தப் பாட்டை;
 இறையவா விளம்புவீரே.
தலமெலாஞ் சுற்றியாடித்
 தாள்வலி கொண்டலைந்தேன்;
நிலமெலாம் மெழுகிப் பூசை
 நிவேதனம் படைத்து நின்றேன்.;
கலமெனக் காட்டும் யோகக்
 கடுநடை கொண்டே யேகி
உலகெலாம் பழிப்பதாக
 உன்மத்தனாயலைந்தேன்

என்றும் பாடியிருக்கிறார். சுவாமிக் கோலத்துடன் ஊருக்கு வந்த இவர் எவருடனும் பேசுவதில்லை. இடையிடையே கதிர்காமத்துக்கும் வேறு ஸ்தலங்களுக்கும் போய் வருவார். பிரதானமாக மௌனம்;

1910 - ஆம் ஆண்டளவில் ஊரைவிட்டு மறைந்து விட்டார். எங்கே போனார் என்று எவருக்கும் தெரியாது. சிதம்பரம் போவதற்காகப் பருத்தித்துறையிலிருந்து தோணியேறி நாகப்பட்டணத்தை அடைந்தார். நீலலோசனி அம்மன் ஸ்தோத்திரத்தின் முகவுரையில் இதுபற்றி இப்படிக் கூறியிருக்கிறார்.



'நாகப்பட்டணம் மவுன சுவாமி என்று பெயர் பூண்ட நான் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு என்னும் ஸ்தலத்திலிருந்து புலன் பொறி கரணம் சீறியாடும் நடைப்படி காலடியாக அலைந்து திரிந்த போது, தன் நிலை படியாததால் நிஷ்டை நிலையைப் படிக்க வேண்டும் என எண்ணிச் சிதம்பரம் போவதாக நாகபட்டணம் வந்த போது, நீலலோசனி அம்மாள் என்னைக் கண்டு, 'அங்கே ஏன் போகிறாய்? என்னிடத்தில் ஞான நிஷ்டையைக் கற்றுக் கொள் என வேண்டியபடி அவ்விடத்தில் நான் ஞான நிலையான ஞான நிஷ்டையைக் கற்று அதில் தேர்ச்சியடைந்த போது, பரிசோதிக்க வேண்டிய காலமாயிற்று'

என்றும்

அருவாச தேவாரம் 34 - ஆம் பக்கத்தில் வசன நடையில் நாகப்பட்டணத்தில் சிலகாலம் ஒரே தூக்கமாகவே தூங்கினேன்

என்றும்

ஊஞ்சலில் 14 - ஆம் பக்கம் 'தாலாட்டு' என்பதில்

நிலைகொண்டு நிற்பதற்கு
 நிஷ்டை கொண்டே யிருப்பதற்கு
விலைகொண்டு வேண்டும்பொருள்
 விளங்குநாக பட்டணமே

என்றும் சொல்லியிருக்கிறார். நீலலோசனி அம்மனிடம் உபதேசம் பெற்ற இவர் நான்கு வருஷ காலமாக நீலலோசனி அம்மன் கோவில் வாயிலில் நிஷ்டையிலே கிடந்திருக்கிறார். கங்காள ரூபமாகக் காணும் இவருடைய படத்தைப் பார்க்க அது விளங்கும். நான் 1939, 1940 - ஆம் ஆண்டுகளில் சுவாமியைத் தரிசிக்க நாகப்பட்டினம் போனேன். இவர் நிஷ்டையிலிருந்த காலத்தில் நாகப்பட்டினத்தில் வைத்திலிங்கம் செட்டியார், கணபதியா பிள்ளை, இராமசாமிப் பிள்ளை என்பவர்கள் பிரபலமானவர்கள். நிஷ்டை கலைந்ததும், 'என் பெயர் அருளம்பலம், அல்வாய் வடக்கு, யாழ்ப்பாணம்' என்று சுவாமி ஒரு சுவரில் எழுதினாராம். அந்த இடத்தில் உள்ளவர்கள் அல்வாய் வடக்கு விதானையாருக்கு அந்தச் செய்தியை அறிவித்தார்கள். அவர் சுவாமியின் மைத்துனரான தம்பிப்பிள்ளை என்பவருக்கு அறிவித்தார்.

தம்பிப்பிள்ளை நாகப்பட்டினம் சென்று சுவாமியைச் சந்தித்தார். பின்பு பலர் போய்ச் சந்தித்தார்கள். நிஷ்டையில் இருந்த காலம் 1910 - 14 எனத் தெரிகிறது.

நிஷ்டை கலைந்து சிலகாலம் நாகப்பட்டினத்தில் தங்கியிருந்து

இடையிடையே வேதாரண்யம். அகத்தியாம்பள்ளி, மாயவரம், காரைக்குடி போன்ற பல இடங்களுக்குச் சென்று தங்கியிருந்தார். ஆனால் இவருடைய பிரதான வாசஸ்தலம் நாகப்பட்டினந்தான்.

புதுவையிலுள்ள பல அன்பர்களின் அழைப்புக்கு இணங்கிச் சுவாமி புதுவைக்கு 1914 - ஆம் ஆண்டுக்குப் பின்னே சென்றிருக்கிறார் புதுவை அன்பர்களில் பிரதானமானவர் மரியநாதன் என்னும் பெரியார். மரியநாதன் 1940 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 10 ஆம் - தேதி அங்கேயிருந்து சுவாமிக்கு நாகப்பட்டினம் அனுப்பிய போஸ்ட் கார்டு ஒன்றைச் சில காரியத்தை எனக்கு விளக்குவதற்காகச் சுவாமி எனக்கு ஒரு காகிதம் எழுதி அதனோடு இணைத்து அனுப்பியிருந்தார். அது என்னிடம் இன்னும் இருக்கிறது.

எந்தை எம் பருமானீசன் அருளம்பல மோன குருநாதர் அருளிச் செய்த நூல்களில் 'சந்தேக நிவிர்த்தி' என்னும் ஒன்று புதுவையில் ஜகந்நாதம் அச்சுக்கூடத்தில் 1934 - ஆம் ஆண்டிலும் 'கற்பு நிலை, என்னும் நூல் புதுவையில் கலாநிதி அச்சுக்கூடத்தில் 1926 - ஆம் ஆண்டிலும், 'சிவதரிசி', அருவாச தேவாரம்' என்னும் நூல்கள் புதுவைக் கலாநிதி அச்சுக்கூடத்தில் 1927 ஆம் ஆண்டிலும் அச்சாயின. பிற நூல்கள் எல்லாம் 1928 - ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னும் அச்சாயின. நூல்கள் அச்சான காலம் அவற்றை எழுதிய காலத்துக்கு மிகப் பிந்தியதே. ஒரு நூலை வரிசைக்கிரமமாக எழுத மாட்டார். கையில் கிடைத்த கடுதாசிகளில் எழுதி அப்படியே போட்டு விடுவார். எதிலும் பற்று இல்லாதவர். நான் இவருடன் மெத்த நெருங்கிப் பழகியவன். இவருடைய போக்கை எனக்கு நன்றாக உணர்த்தியிருக்கிறார். எவரும் கிட்டப் போய்க் கதைக்க முடியாது. எவருக்கும் பயம். சம்மணங்கூட்டி அமர்ந்திருக்கும் இவரது திருவுருவப் படத்தைப் பார்க்க, இது ஏன் என்று விளங்கும். திருவிழியால் அருளைப் பெய்யும் அறங் கனிந்த உள்ளம். முன்னிலையில் சுட்டுப்பார்வையில்லாமல் தங்கப் பதுமை உருவான ரிஷியாகக் காட்சி அளிப்பார். அன்பர்கள் நாளுக்கு நாள் இரந்து கேட்கும் வேண்டுகோளுக்கு இணங்கியே தம் நூல்களை அச்சிடச் சம்மதித்திருப்பார். முக்கியமான நூல்கள் புதுவையில் அச்சானதிலிருந்து, புதுவைக்கும் சுவாமிக்கும் நெருங்கிய போக்குவரத்தும் தொடர்பும் இருந்திருக்கின்றன என்பது தெளிவு.

இந்தியாவில் இவரை 'யாழ்ப்பாணத்துச் சாமி' என்று குறிப்பது சர்வ சாதாரணம். ஓர் உதாரணம்; நான் 1939 - ஆம் ஆண்டு டிசம்பர் மாசம் முதல் முறை இந்தியாவுக்குப் போனபோது, சுவாமியைத் தரிசனம் செய்ய நாகப்பட்டினம் சென்று ஸ்டேசனிலிருந்து வெளியே



நடந்தேன். ஒரு கரத்தை (வண்டிக்) காரன் அங்கே நின்றான். அவனைப் பார்த்து, 'அருளம்பலச் சாமியாருடைய இடத்துக்குக் கொண்டு போய்விடு' என்று கேட்டேன். 'அப்படி இந்த ஊரில் அருளம்பலச் சாமி என்று ஒரு சாமி இல்லையே' என்றான்; சொற்ப நேரம் அவன் தலையை அசைத்து மேலும் கீழும் பார்த்து விட்டு 'மவுனு குரு சாமியோ?' என்று கேட்டான். நான் பதில் சொல்ல வாய் குவிக்குமுன் மீண்டும், 'யாழ்ப்பாணத்துச் சாமியா? பூந்தோட்டத்தில் ஐயாவா?' என்று கேட்டான். நான், 'ஆமாம்' என்றேன். அவன் என்னை அவருடைய வாசஸ்தானமான நீலலோசனி அம்மன் பூந்தோட்டத்தில் கொண்டு போய்விட்டான். அவர் பூந்தே ட்டத்தில் இருந்தபடியால் அவரை அங்கேயிருந்தவர்கள் 'பூந்தோட்டத்தில் ஐயா' என்று சொல்லுவார்கள்.

'தேவிபத மறவாத தீரஞானி, பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி' 'திருவிழியால் அருளைப் பெய்யும் வானவர் கோன் 'சங்கரன்' என்றெல்லாம் இவரைப் பாரதியார் வியந்து பாடியது சாலப் பொருந்தும்.

தென்புலோலியூர் புற்றளையாம் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் என் குல தெய்வமான விநாயகப் பெருமான் திருவருள் கூட்டி வைக்க 1929 - ஆம் ஆண்டு நான் எனது பத்தொன்பதாம் வயசில் வலிய யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன். பாவியரை கரையேற்றும் ஞானத் தோணியில் அப்போ என்னைத் தூக்கிப் போட்டு என்னை ஆட்கொண்ட அந்தத் திருவிழியால் அருளைப் பெய்யும் வானவர்கோன் யாழ்ப்பாணத்தீசன், கல்லும் கரையும்படி ஸ்ரீநாகை நீலலோசனி அம்மன் பேரில் பாடியிருக்கும் ஸ்தோத்திரமும், அந்த அம்பாள் பேரிலேயே பாடியிருக்கும் ஊஞ்சலும் இதற்குச் சான்றாகும். சர்வலோக நாயகியான நீலலோசனி அம்பாள் தமக்கு நேரே வந்து நிஷ்டை நிலையை உபதேசித்த சந்தோஷத்தால் 7 - ஆம் தோத்திரத்தில்

குவலயம் படைத்திட்ட
நாகை நீலாட்சியே
குருவாக நின்ற கொடியே

என்றும் 18 - ஆம் தோத்திரத்தில்

குருவான நாகையிலே
கொடியாக வெழுகின்ற
குமரியே நீலாயதாட்சியே

என்று அந்த அம்மையாரை அன்பினால் குமரியே என்று சரசமாக அழைத்தும், 4 - ஆம் தோத்திரத்தில்,

பரநேய நிஷ்டை செய்து
பலருக்கும் பேரின்ப
நிலைகாட்டப் பணிக்குவாய்
பார்பூத்த பரையினாளே

என்றும், பலரும் பெரிய நிலையை அடைய வேண்டுமென்ற ஜீவ காருண்ய நிறையோடு திருவிழியால் அருளைப் பெய்து அறங் கனிந் தொழுகும் உள்ளத்தோடு பாடிய பாடல்கள் எந்தக் கல்நெஞ்சையும் கரையச் செய்யும். மேலும் ஊஞ்சலில்

அண்டமான ஊஞ்சலிலே
அடிமுக்கோணப் பலகையிலே
கொண்டபடி மூவுலகும்
கொடியேறும் முச்சுடரால்
தண்டலாக வளர்ந்தபடி
சடைநாகங் குலுங்கியாடக்
கண்டதிருமாலைக் கண்டு
கண்வளராய் நீலாட்சி

என்று கசிந்துருகிப் பாடி, அந்த உலக மாதாவை ஊஞ்சலாட்டுவதை நினைக்கும்போது இரும்பும் உருகுமே.

'தேவிபத மறவாத திரஞானி' என்று சொல்லவும் வேண்டுமோ? சர்வலோக நாயகனான ஸ்ரீ பாலசுப்பிரமணியனை வாரி அள்ளிஅணைத்து முத்தமிடும் அருமைத் திருக்கரங்களால் மகாபாவியான எனக்கு 1939 ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் சாதங்கறி சமைத்து இலை போட்டு அதில் சாதங்கறியைப் படைத்து, கீரைக் கறிக்கு 'நல்லெண்ணெய் மெத்த உவப்பு'' என்று சொல்லி அதில் கொஞ்சம் நல்லெண்ணெயும் ஊற்றி என்னைச் சாப்பிடும்படி சொல்ல, நான் சாப்பிடும்போது ஒரு குழந்தைப் பிள்ளைபோல் என் முன்னேயிருந்து மழலையாகவும் சரசமாகவும் உள்ளம் விட்டு என்னோடு பேசிக் கொண்டிருந்த திருமுகூர்த்தத்தை உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் என் உள்ளம் உருகுகிறது. மேலும் அந்த யாழ்ப்பாணத்தீசர் 1931 - ஆம் ஆண்டளவில் எனக்குப் புற்றளையில் பிள்ளையாரின் முதல் மண்டபத்தில் தரிசனத்தில் தோன்றி நான் பாடுவதைக் கேட்கத் தமக்கு மிகுந்த சந்தோஷம் என்றும் தம்மைக் குறித்துப் பாடும் படியும் கட்டளையிட 'நான் படிப்பில்லாத மூடன்; எனக்குப் பாடத தெரியாது சுவாமி' என்று சொல்ல 'தத்துவம் தொண்ணூற்றாறு' என்று பாடும்படி திருவாய் மலர்ந்தரு



ளிப் பல பாடல்களைப் பாடுவித்தது அவருடைய சர்வ வல்லமையையும் சர்வசித்தியையும் விளக்குகின்றன. என்னைப் போல் மொக்கனும் மூடனும் இந்த உலகத்தில் உண்டோ?

எட்டுநாளாக வூட்டி
ஈரெட்டுப் பதினாறென்று
திட்டமா யெண்சட்டத்தில்
திருத்தமாய் விளக்கி வைத்தும்
மட்டமாய்ப் பதினெட்டென்று
மற்றநாள் சொல்வேனென்றால்
சட்டம்பி யாரென்செய்வார்
சாற்றுவீர் சாந்தமூர்த்தி
கண்ணிலான் குருடனென்றும்
காதிலான் செவிடனென்றும்
தொண்ணூறு நாளாய்ச் சொல்லிச்
சொல்லடா இப்போ என்னக்
கண்ணிலா னூமையென்றும்
காதினாற் பார்ப்பானென்றும்
அண்ணலே சொல்வே
னென்றால் அசட்டினை மொழியலாமோ?''

என்று என்னுடைய அசட்டுத்தனத்தை நான் பாடியதும் பொருத்தமே. ஆயினும், சுவாமி இன்றும் அன்றும் எனக்கு மழலையைப் பொழியும் 'குழந்தை' அருளம்பலந்தான். மானிடப் பதரான எனக்கே இப்படி என்றால், அருட்செல்வத்தைத் தமது பிறப்புரிமையாகக் கொண்ட திருவருட் செல்வம் சுப்பிரமணிய பாரதியாருக்குஎந்தவிதம்திருவிழியாலருளைப் பெய்திருப்பார்என்றுநினைக்கத்தான் போமோ, சொல்லத்தான் போமோ? அருளம்பழ ரசத்தை மூக்கு முட்டக் குடித்த பாரதியாருக்கு ஆனந்த மேலீட்டினால் இவரைப் பலபடியாகத் துதித்துப் பாடியது ஒரு புதுமையோ?

சுப்பிரமணிய பாரதியாருக்கு இவர்தான் வாய்த்த குரு; பாரதியாரை அருளம்பலம் முற்றாகத் தன்மயமாக்கி விட்டார். சுவாமியின் திருவுருவப் படங்களுடன் பாரதியாரின் படத்தையும் வைத்து ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது எதையும் மதியாத, எதிலும் பதியாத பிரம்ம நோக்கான அக்கினிப் பார்வை இருவரிடமும் புலப்படும். பாரதியாருக்குச் சுவாமி தம்மை நன்றாக உணர்த்தியிருக்கிறார். சுவாமியைப் பற்றிப் பாரதியார் வர்ணித்துப் பாடியதெல்லாம் முற்றும் பொருத்தமே. சுவாமியின் திருமேனி உருக்கி வார்த்த சொர்ணலிங்கம். ஒரு தங்கப் பவுனை அவருடைய திருமேனியில் வைத்தால் அதன்

ஒளி அந்தத் திருமேனியின் பிரபையில் லயித்துவிடும்.

1929 - ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து சுவாமி இங்கே வந்தார். வியாபாரி மூலையில் தம் பிதா வழி உறவினர் சிலரோடும் வதிரியில் தம் சகோதரியுடனும் தங்கி யிருந்தார். 1930 - ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திரும்பவும் இந்தியாவுக்குச் சென்று விட்டார். வியாபாரி மூலையில் பிரபல வர்த்தகராயிருந்து காலஞ்சென்ற திரு. வெ. க. சிவப்பிரகாச பிள்ளை அவர்கள் நாகப்பட்டினத்தில் அக்கரைக் குளத்துக்குச் சமீபமாக ஒரு காணி வாங்கி மடம் கட்டி, அதில் சுவாமியை இருத்தினார். 1940 - ஆம் ஆண்டு நான் நாகப்பட்டினம் போனபோது, சுவாமி அந்த மடத்தில் இருந்தார். பின்பு 1942 - ஆம் ஆண்டு நவம்பர் மாசம் 27 - ஆம் தேதியளவில் சிவப்பிரகாசபிள்ளையோடு இந்தியாவிலிருந்து திரும்பி வியாபாரி மூலைக்கு இவர் வந்தார். சிவப்பிரகாச பிள்ளை அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தார். நாகப்பட்டினத்திலிருந்து வெளிக் கிளம்பியபோது சுவாமிக்குச் சடை வளர்ந்திருந்ததால், அதை நீக்கி இவர் நிர்வாணக் கோலத்திலே குந்தியிருக்கும் நிலையில் ஒரு படம் எடுத்தோம். 1942 - ஆம் ஆண்டு டிசம்பர் மாசம் 3 - ஆம் தேதி சம்மணங் கூட்டியபடி நிஷ்டையில் அமர்ந்திருந்து மகா சமாதி நிலையையே அடைந்தார். டிசம்பர் மாசம் 5 - ஆம் தேதி மாலையில் இவரை வியாபாரி மூலை வீரபத்திர சுவாமி கோவிலுக்கு அருகாமையில் அரசாட்சியாரிடம் உத்தரவு பெற்று வேதாகம விதிப்படி சமாதி வைத்தோம். சமாதி ஆலயமுங் கட்டி நித்திய பூசையும் நடந்து வருசிறது. இதைத் தர்ம பரிபாலனம் செய்பவர் சிவப்பிரகாச பிள்ளையின் குமாரரும், திரிகோணமலை, ஸ்ரீ கிருஷ்ண படமாளிகையின் சொந்தக்காரருமான திருவாளர் பாலசுப்பிரமணிய பிள்ளை.

பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும்
முதற் பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந் தேனாகி
அருளானோர்க்கு அகம்புறமென்று உன்னாத
பூரண ஆனந்தமாகி
இருள்தீர விளங்கு பொருள்யாது அந்தப்
பொருளினையே இறைஞ்சி நிற்பாம்.

— தாயுமானவர்.



# "தூண்டு தவ விளக்கனையார்"

( வித்துவான்: வசந்தா வைத்தியநாதன். )

உலகின் வளங்களனைத்தையும் தம்முள்ளே கொண்டு திகழ்வது திருமுனைப்பாடி நாடு. அங்கு தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் "திருவாமூர்" என்ற தலமுண்டு. அத்திருத்தலத்தின் கண் ஒழுக்க நெறி குன்றாது.

"வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணாதார்" என்று பேசப்படுகின்ற வேளாண் குலத்திலே வந்து குறுக்கையிர் குடியில் தன் பெயருக்கேற்ப கொடைத் தன்மையிலும் சிறந்து விளங்கினார் "புகழனார்" என்ற பெரியார். அவர் தம் குடிப் பெருமைக்கேற்ப ஓர் மாசில் மகளாம் "மாதினியார்" என்பவரை திருமணம் நேர்ந்தார்.

மாதினியாரின் மணிவயிற்றிலே செந்தாமரையினில் திகழும் திருமகளாம் "திலகவதியார்" பிறந்தார். திலகவதியார் பிறந்து சில ஆண்டுகள் கழிந்த பின் எல்லையில்லாத கலைத்துறைகள் தழைக்கவும், அருந்தவத்தை மேற்கொண்டார் தம் நெறி வழாமல் நிற்கவும், உலகின் புற இருளை நீக்கி, ஒளி யுமிழ்கின்ற கதிரவனைப் போன்று மக்கள் மன இருள் இரிய "மருள் நீக்கியார்" என்ற மகனார் திருவவதாரம் செய்தார்.

புகழனாரும் தன் மகனுக்குச் செய்யவேண்டிய மங்கல வினைகள் யாவும் குறைவறச் செய்தார். மருள் நீக்கியாரும் இளங் குழவிப் பதங்கடந்தார் * "மயிர் வினை மங்கலம் முதலிய சடங்குகளை முறையாக நடத்திப் பின்பு, முகிழ்ந்த மனத்தினை மலர்விக்கின்ற கல்வியைப் பயிலுவித்தனர். "மறுவொழித்த இளம் பிறை போல்" மைந்தனாரும் வளரலுற்றார். திலகவதியாரும் பன்னிரண்டு அகவைகள் கடந்து மணப்பருவம் அடைந்தார். சிறந்த ஆணழகரும், அரியேறு ஒப்பாரும் தானைத் தலைவரும், செஞ்சடை அண்ணலின் சீரடிகளில் ஆழ்ந்த பற்றுடையவருமான "கலிப்பகையார்" என்ற பெரியார் மகள் வேண்டிப் புகழனாரிடத்துச் சிலரைத் தூது அனுப்பினார். புகழனாரும் மணவினைக்கு இசைந்தார்.

இந்நிலையில் மணம் முடிவதற்குள்ளாக பகைவர்கள் கலிப்பகையாரது நாட்டின் மேல் படையெடுத்தனர். அவர்களை வெற்றி கொள்வதற்காக, மன்னனின் ஆணைக்கிணங்கிய அவர் போர்க்கோலம் தாங்கி வடபுலம் சென்றார். இடைக்காலத்திலே

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு''.

என்ற நிலையாமையையே அணிகலனாகக் கொண்ட இவ்வுலகத்திடமிருந்து புகழனார் விடைபெற்றார். என்றும் பிரியாத பெரு வாழ்வெய்தும் அமர உலகை விரும்பி, சுற்றத்தையும், மக்களையும் துகளாக நினைத்து கற்பு நெறியினின்று வழுவாமல் கணவனுடன் மாதினியாரும் சென்றார்.

பெற்றோர்களை ஒருமித்து இழந்த திருவனைய திலகவதியார், மன்னவற்காக போர் மேற்கொண்டு வடபுலம் சென்ற கலிப்பகையாரும் பொருகளத்திலே உயிர் கொடுத்துப் புகழ் கொண்ட செய்தியைக் கேள்வியுற்றார். எந்தையும், தாயும் என்னை அவர்க்கு மணம் புரிவிக்க இசைந்தமையால் அவ்வினாடி முதல் நான் அவர்க்கே உரியவள். ஆகையால் எனது உயிரை அவர் உயிரோடு இசைவிப்பேன் என உறுதி பூண்டார். அவ்வமயம் மருள் நீக்கியார் அங்கு போந்து ''அன்னையும் அத்தனும் அகன்ற தன்பின் உம்மிலே அவர்களைக் கண்டு யான் வணங்குகின்றேன். தாங்களும் என்னைத் தனியாகத் தவிக்கவிட்டு ஏகுவீர்எனில், யான் உமக்கு முன் உயிர் துறப்பேன் இஃது உறுதி'' என அழுது அரற்றித்தமக்கையாரின் தாளிணை பணிந்தார். தம்பியாரின் நிலை கண்டு வருந்திய தேவியாரும், உடலால் வாழாது உள்ளத்தினால் வாழத் துணிந்தார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்

''தம்பியார் உளராக வேண்டும்'' என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலை விலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்.

எனச் சுவைபடச் சுட்டுகின்றார்.



காலதேவனது கைவண்ணத்தினால் மருள்நீக்கியாரும் வளர்ந்தார். நன்நெறியைப் பகுத்துணர ஈசன் அருளாமையால் கொல்லாமை நோன்பு கொண்ட சமண சமயத்தைச் சார்ந்தார். பாடலி புரத்திலுள்ள சமணப் பள்ளியை அணுகி அருக சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவரது நுண்ணறிவின் திறப்பாட்டை உணர்ந்த சமணர்கள் இவருக்குத் ''தர்ம சேனர்'' என்ற பட்டம் கொடுத்துச் சிறப்பித்தனர். தருமசேனரும், பலரையும் தனது சொல் வன்மைய ல் வாதில் வென்று தலைமைப் பதவி ஏற்றுச் சிறப்புடன் திகழ்ந்தார்.

தீ நெறியிலே தம்பியார் ஒழுக, சிவநெறியாம் செந்நெறியிலே ஒழுகும் தமக்கையார் அட்ட வீரட்டங்களுள் ஒன்றாகிய திருவதிகை வீரட்டானத்தை வந்தடைந்தார். செம்பவளக்குன்றாம் அதிகை அத்தனாரைப் பணிந்து கோதில் சிவ சின்னங்கள் தாங்கினார். தமது திருக்கரங்களாலேயே புலர்வதன்முன் திருவலகிடுவார்; ஆன் சாணத்தினால் திருமெழுக்கிடுவார். நறிய மலர்களைக்கொய்து, இண்டைகளும், மாலைகளும் சமைத்து ஆண்டவனுக்கு அளிப்பார். இவ்வண்ணம் இறைவனின் திருப்பணிகளிலே தன்னை ஒருமைப்படுத்தி நாட்களைக் கழித்தார். அவ்வமயத்திலே தம்பியார் பரசமயப் படுகுழியிலே விழுந்ததைக் கேள்வியுற்றுத் துயருழந்து

''தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழு(து)
''என்னை ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள வேண்டும்''.

என விண்ணப்பம் செய்தார். தவமென நினைத்துத் தலை பறித்து நின்றுண்ணும் தீ நெறியிலே வீழாமல் அவனுக்கு அருள்புரியும் என அதிகைப் பெருமான் அடி பணிந்தார். அணங்கனையாரின் வேண்டுகோட்கு இரங்கிய அண்ணலும் ''சூலை நோய் கொடுத்து அவனைத் தடுத்தாட்கொள்கிறோம்''. என அசரீரியாகத் திருவாய் மலர்ந்தார்.

உடன் பாடலிபுரப் பள்ளியிலுள்ள தருமசேனரின் குடருக்குள், வடமுகாக்னியும் கொடிய விடமும், வச்சிரம் போன்ற கொடிய ஆயுதங்களும் ஒன்று சேர்ந்து வருத்துவதைப் போன்று சூலை நோய் புகுந்து வருத்தியது. தாங்கலாற்றாது தருமசேனரும் அரற்றினார்; அழுதார்;

துடித்தார் சமணர்களின் மருந்தும் மந்திரமும் பயனற்றுப் போயின. முந்தைய உணர்வுகள் வரப்பெற்ற அவரும் தனது சமையற்காரனை அழைத்து தனது நிலையினைத் தமக்கையாருக்கு உணர்த்தி வருமாறு பணித்தார். அவனும் அவ்வாறே செய்தான். ஆனால் அம்மையாரோ "நன்னெறி அறியாத சமண் பள்ளிக்கு யான் வரமாட்டேன்". என மறுத்தார். அடுதல் தொழில் வல்லானும் மீண்டு சென்று இதனைத் தருமசேனருக்குக் கூற, அயர்வெய்திய அவரும் தமக்கையாரிடம் மன்னிப்புக் கோர திருவதிகை நோக்கி விரைந்தார்.

பாய், உறியிலே தொங்கும் குண்டிகை முதலிய சமணச் சின்னங்களை ஒழித்துத் திலகவதியார் வதியும் திருமடத்தை வந்தணைந்தார். பின்பு தமக்கையாரது பாதமிசைச் சென்னியினைச் சூட்டி

"நந்தமது குலஞ் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்!
இந்தவுடற் கொடுஞ் சூலைக் கிடைந்தடைந்தேன்
இனி மயங்கா(து)
உய்ந்துகரை ஏறுநெறி உரைத்தருளும்".

என உரைத்தார். தாளிணையில் விழுந்த தம்பியை ஆர்வமுடன் எடுத்தணைத்துக் கற்றை வேணியாரது கழலினைப் பணியப் பணித்தார். திருநீறு அளித்தார். அக இருள் நீங்கப் பெற்ற தரும சேனரும் திருவதிகைக் கோயிலினுள் புகுந்து, பிறை சூடிய பெம்மானுக்குத் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு வரப் பெற்றவராய், மாற்றார் புரம் எரிய நகைத்த வேதியரை மருட்டுகின்ற பிணி ஒழுக்க இறைஞ்சி "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என எடுத்து பாமாலை புனைந்து சூட்டினார். பிணி நீங்கப் பெற்றார். இறைவன் திருவாக்கினால் "திருநாவுக்கரசர்" என்ற திருநாமம் சூட்டப் பெற்றார்.

இவ்வாறு சமண் சமயத்திலிருந்து சைவ உலகிற்கு திருநாவுக்கரசரைத் திருப்பிய பெருமை தூண்டு தவ விளக்கனையாரைச் சேர்ந்தது என்று கூறல் மிகையோ?

* மயிர்வினை மங்கலம் என்பது குழந்தையைப் பள்ளியில் வைக்கும் காலத்தில் முன் மயிரை நீக்குவது வழக்கம். இதனைச் "சௌளக் கல்யாணம்" என்று கூறுவர்.



# பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச்சாமி

## அருளம்பலம்.

யாழ்ப்பாணன்.

தெங்கினொடு பனைமரமும் கமுகும் சேரத்
தேன்கதலி பலாவினொடு மாவும் மண்டி
இங்கிதஞ்சேர் வதிரிதனில் எழுந்த கோவே
இளமைதரும் காலமதி லெமது வூரில்
பொங்கியெழும் அலைபடியும் கடலி னோரம்
புன்னைமரம் வளர்ந்தவுயற் கோயில் சாரல்
தங்கியுயர் விளையாட்டுந் தோழ ரோடும்
தலமதில் நீ தினமமர்ந்தாய் சார்ந்தும் நீதான்

பள்ளிதனில் கல்வியதும் பயின்றாய் வித்தன்
பார்புகழும் கதிரைவேற் பிள்ளை தன்னின்
உள்ளமுறை சீடனாகி யுயர்ந்து நின்றாய்
உயர்மலை சேர் கம்பளையில் கடையிற் சேவை
கொள்ளலுமே தனிக்கடையும் வைக்க வோர்ந்தாய்
குணதிசையூர் மட்டுநகர் சிலகால் சென்றே
மெள்ளவுநீ துறவியென மாறி வந்தாய்
வியாரி மூலைதனில் விளக்க மானாய்

ஈரிரண்டு வருடமது வுணவே யின்றி
எழில்மிகுந்த பாரதத்தின் நாகை தன்னில்
பேரரிய ஞானியென நிட்டை யெய்திப்
பெருங்கவியோன் பாரதியும் புகழ வைத்தாய்
ஊரறிய இன்றுனது வுண்மை காட்டி
உளமதிலேன் ஒளியெனவே தோற்றம் காட்டிச்
சாருமுன தருஞ்சீடன் சபா பதியைத்
தமியனுமுன் தூண்டவுநீ யன்று வைத்தாய்

உன்திருவை உன்பதத்தை உளத்தே போற்றி
உன்பெருமை உலகமதி லறியக் காட்டி
என் புருகும் பதமெடுத்தும் இங்கு வந்தோர்
எழிற்கவிஞர் புரவலர்கள் அறிஞ ரெல்லாம்
நன்தமிழில் பாடல்களும் உரையுந் தூவி
நற்பதத்தைப் போற்றுவர்தாம் ஞானி நீதான்
அன்பினையும் அருளினையும் பொழிவா யிந்த
அறிஞர்முற் போக்கினரை வாழ்த்தி வைப்பாய்.

ஆன சமயம் அது இது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
உளங் கடந்த உருவது வாமே.

—திருமூலர்.

வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே! நின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா!

—தாயுமானவர்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதியில்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

—திருமூலர்.

சைவ முதலா மளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னையான் அணுகவுந்
தண்ணருள் வகுக்கவிலையோ
பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யறிவிற்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவரவற்ற பொருளே.

—தாயுமானவர்.



# கடோப நிஷதக் கருத்து

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

— முன் இதழ்த் தொடர்ச்சி —

## பிரணவம்

70. ஓம் பிரணவம், ஏகாக்ஷரம், ஓங்காரம் என்னும் பெயர்களாலும் அறியப்படுகிறது.

71. ஓம் பிரம்மத்திற்கு ஒரு பிரதிமை அல்லது சின்னம் அல்லது பகரப் பொருள். அது சப்தப் பிரம்மம்.

72. ஓம் எல்லா ஒலிகளுக்கும் அடிப்படை. அது பிரம்மத்தின் முதல் வெளிப்பாடு.

73. ஓம் பிரம்மத்தின் மிக நிரம்பப் பொருத்தமான ஒலி அல்லது குறியீடு. அது மூ வெழுத்துக்களை — அ,உ,ம் — உட்கொண்டிருக்கிறது.

74. ஒலி, சொல் அல்லது பெயர் பிரிக்க முடியாத வகையில் எண்ணம் அல்லது கருத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது.

75. ஓம்உண்மையாகபிரம்மமே. ஓம்உண்மையாகஉறுபல உயர்வானது. யார் ஓம் என்னும் சொல்லை அறிகிறானோ அவன் தான் விரும்பும் ஏதேனையும் உண்மையாகப் பெறுகிறான்.

76. ஓம் பிரம்மம்தானே. ஓம் என்பதும் பிரம்மமும் பிரிக்க முடியாதபடி தொடர்புடையன. ஓம் பிரம்மமாகவே தியானிக்கப்பட வேண்டும்.

77. ஓம் சகுணப் பிரம்மம் நிர்க்குணப் பிரம்மம் இரண்டினதும் சின்னமே.

78. ஒருவன் சகுண பாவகத்துடன் பிரம்மத்தைத் தியானித்தால் அவன் சகுண அல்லது காணப்படும் பிரம்மத்தை அடைவான்.

79. ஒருவன் நிர்க்குண பாவகத்துடன் ஓம் என்பதைத் தியானித்தால் அவன் நிர்க்குண பிரம்மத்தை அடைவான்.

80. புலப்பாடான [வியக்த] பிரம்மம் அடையப்பட வேண்டும். புலப்படாதது [அவ்யக்த] அறியப்பட வேண்டும்.

81. ஓம் என்பதே சிறந்த ஆதாரம். அதுவே புலப்பாடான அல்லது சகுணப் பிரம்மத்தையும் உறுபல உயர் அல்லது நிர்க்குணப் பிரம்மத்தையும் எய்தப் பெறுவதற்குச் சிறந்த சாதனம்.

82. யார்பிரம்மத்தைத்தியானிக்கிருனேஅவன்பிரம்மத்துடன் அநந்நியமாகி பிரம்மம் போல வழிபடப் படுவதற்குத் தகுதியானவனுகிறுன்.

83. பிரம்மஞானி பிரம்மமே யாகிறுன்.

84. ஓம் என்பதே உறுபல உயர் ஆதாரம். யார் இவ்வாதாரத்தை யறிகிறுனே அவன் பிரம்மமாக இவ்வுலகில் வழிபடப் படுகிறுன். அவன் பிரம்மம் போன்று வழிபடப்படுகிறுன்.

## தலைசிறந்த ஆன்மாவின் இயல்பு

85. ஆத்மன் பிறப்பிறப்பற்றது. அது ஏதேனும் ஒன்றிலிருந்து உண்டாகவில்லை. அது ஆதியந்த மில்லாதது, புராதனமானது. உடல் கொல்லப்பட்டாலும் அது கொல்லப்படுவதில்லை.

86. மண்ணிலிருந்து கடம் உண்டாக்கப் படுவதுபோல் பிரம்மம் உண்டாக்கப் படுவதில்லை. அது காரணங் கடந்தது. அது உருவாக்கிய பொருட்களுக்குச் சம்பவிக்கும் எல்லா மாற்றங்களிலிருந்தும் சுவாதீனமானது.

87. பிரம்மம் தேய்வின்றியது, நிர்விகாரமானது. பிரம்மம் முடிவற்றதாயிருப்பதால் அது ஒருகாலும் தேய்வதில்லை.



88. மாற்றங்களும் முதிர்ச்சிகளும் பிரம்மத்தில் நிகழ்வதில்லை. ஏனெனின் அது மாறுவதில்லை, என்றும் நிலையானது. ஆகையால் அது புராதனமானது.

89. கடம் உடைந்தாலுங் கூட கடாகாயம் பாதிக்கப் படாதிருப்பது போல் உடல் கொல்லப்பட்ட போதிலும் இவ்வாத்மன் அழிக்கப் படுவதில்லை, பாதிக்கப்படுவதில்லை.

90. இவ் வாத்மன் அற முடிவாக நுட்பமானது. அது வாளினுற் கொல்லப்பட முடியாது.

91. அறியாமை மிகுந்த மக்கள் இவ் வுடம்பை ஆன்மாவாகக் கருதி ஆன்மாவை உடம்புடன் ஒன்றிக்கிறுர்கள்.

92. கொல்வோன் இவ்வுடம்பை ஆன்மாவாகக்கருதி ''நான் கொல்கிறேன்' என்று எண்ணினுல், கொல்லப்படுவோன், 'நான் கொல்லப்படுகிறேன்' என்று எண்ணினுல் அப்போது அவர்கள் இருவரும் ஆத்மனை அறிகிறுர்களில்லை. அவர்கள் இருவரும் அறியாமை மிகுந்தவர்களே. ஆன்மா கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை.

93. நுட்பமானதிலும் அதி நுட்பமான, பெரியதிலும் அதி பெரிய ஆத்மன் ஒவ்வொரு உயிர்ப் பிராணியின் இருதயத்தில் வீற்றிருக்கிறது. யார் ஆசையின்றியவனே அவன் அமைதிப் படுத்திய மனம், புலன்களுடன் ஆன்ம – மாட்சிமையைப் பார்க்கிறுன். மேலும் துன்ப துயரத்திலிருந்து விடுதலையாகிறுன்.

94. எறும்பின் ஆன்மா ஆனையின் ஆன்மாவினின்றும் மாறுபாடில்லாதது. எல்லாப் பிராணிகளிலும் ஒரேயொரு பொதுத் தன்னறிவு உண்டு.

95. இவ் வுலகப் பொருட்கள் அனைத்தினதும் அடிப்படை அல்லது ஆதாரம் ஆத்மனே.

96. கயிற்றிற் பாம்பு அத்தியாசிக்கப் பட்டதுபோல் முழுவுலகும் ஆத்மனில் அத்தியாரோபிக்கப்பட்டிருக்கிறது.

97. இவ்வுலகம் ஆத்மன் அல்லது பிரம்மத்திற்கு வேருக தற்சார்புடைய இருப்பு பெற்றிருக்கவில்லை.

98. அமர்ந்து கொண்டு ஆத்மன் வெகு தூரத்திற்குச் செல்கிறது. படுத்துக் கொண்டு அது எங்கும் திரிகிறது. ஏனெனின் அது சர்வ வியாபகமாகவும் அநந்தமாயுமிருக்கிறது.

99. ஆத்மன் மகிழ்ச்சி யடைகிறது. அது மகிழ்ச்சி யடைகிறதில்லை. அது தன் சார்பு நிலையில் துய்த்து மகிழ்கிறது. ஆனுல் அது தன் தனி இயல்பில் மௌன சாட்சியே. ஆகையால் அது மகிழ்ச்சியடைகிறதில்லை.

100. நுட்ப, கூரிய, தூய நுண்ணறிவும் படிப்பும் சாதன சதுட்டயமும் இயற் பண்பாகப் பெற்றிருக்கும் திறமை வாய்ந்த நாடுபவர்கள் ஆத்மனை அறிய முடியும்.

101. ஆத்மனை உடம்பற்றதாயும் உறுதியாக இவ்வழியுமுடலில் நிலைத்திருப்பதாகவும் மகத்தாகவும் சர்வவியாபகமாகவும் அறியும் கூரறிவுள்ள ரிஷி ஒருகாலும் துயரப்படுவதில்லை.

102. இவ் வாத்மன் உடம்புகளுக்குள்ளே உடம்பற்றிருக்கிறது. அது நிலைமாறும் பொருட்களின் நடுவே மாருதிருக்கிறது.

103. தன்னிறைவுப் பேறடைந்த அதாவது ஆத்மனை நேர் உள்ளுணர்வுக் காட்சி [அபரோக்ஷானுபூதி] மூலம் அறிந்த ரிஷிகள் துயரப் படுவதில்லை. — தொடரும்

சாதியுமதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக்
குப்பையுந் தணந்தேன்
நீதியுநிலையுஞ் சத்தியப் பொருளு நித்தியவாழ்க்
கையுஞ் சுகமு
மாதியுநடுவு மந்தமுமெல்லா மருட்பெருஞ்
சோதி யென்றறிந்தே
ஞேதியவனைத் துநீயறிந்தது நானுரைப்ப
தென்னடிக் கடியுனக்கே.
— இராமலிங்க சுவாமிகள்



# ஆனந்தமாயி அம்மையிடம்

# அன்பர்கள் சம்பாஷணை.

[முன் இதழ் தொடர்ச்சி.]

**விஞவுபவர்:—** முழுமையான நாசத்தைப்பற்றி நான் கருதினேன்.

**மாதாஜி:—** நாசம் அல்லது இலயம்? நச 'அவன் அன்று' என்று பொருள்படுகிறது. நஸ்வ * 'ஆன்மா அன்று' என்று பொருள்படுகிறது. இதுவே நிச்சயமாக நாசம் என்று சொல்லப்படுகிறது. எங்கு நாசம் அழிக்கப்பட்டுள்ளதோ அங்கு அது உண்டு. மனேஞசத்தை நீங்கள் இலயம் என்று சொல்கிறீர்களோ?

**விஞவுபவர்:—** இதை எங்ஙனம் நான் கிரகிக்க வேண்டும்?

**மாதாஜி:—** முறையைச் சுட்டிக் காட்டுவது குருவைப் பொறுத்தது. அவர் ஓர்ந்தறியும் வழியைக் காட்டி உலக சாதனையை உங்களுக்கு அறிவுறுத்துவார். விசுவாசமாக அதை விடாது பயில்வது உங்களைப் பொறுத்தது. ஆனுல் பலன் தன்னருட்டெரிப்பு வடிவில் தானுக வருகிறது. கிரகிக்கப்படாததை உங்களைக் கிரகிக்கப்பண்ணும் சக்தி தானுக-குருவின் முன் மூலம் உரிய காலத்தில் வெளிப்படையாகிறது. எங்கு 'எப்படி நான் பிரவர்த்திப்பது' என்ற விஞ எழுகிறதோ நிறைவேற்றம் ஐயமின்றி இன்னும் அடையப்படவில்லை. ஆகையால் மெய்யறிவு ஏற்படும் வரையில் உங்கள் முயற்சிகளைத் தளரவிடாதீர்கள். இடை முறிவுகள் யாதும் உங்கள் முயற்சியைத் தடை செய்யா திருக்கட்டும். ஏனெனில் ஓர் இடைமுறிவு ஒரு சுழலை உண்டாக்கும். அவ்வாறிருத்தலால் உங்கள் முயற்சி தைல தாரைபோன்று தொடர்ச்சியானதாயிருக்கவேண்டும்; அது வலிமையளிக்கப்படவேண்டும்; நிலையானதாயிருக்க வேண்டும்; இடையருத நீரோட்டம் போலிருக்கவேண்டும்.

* வங்காளப் பாஷையில் சவும் ஸ்வவும் ஒரேமாதிரி ஒலிக்கின்றன,

உடம்பு உணவையும் உறக்கத்தையும் தேவைப்படுவதை நீங்கள் ஆட்சிகொள்ளவில்லை யென்பது முக்கியமன்று. சாதனை செய்வதில் இடையீடுவிடாதிருப்பதே உங்கள் நோக்கமாயிருக்கவேண்டும் உணவு, உறக்கம் வகையில் நீங்கள் தேவைப்படும் யாவும், ஒவ்வொன்றும் நியமிக்கப்பட்ட வேளையில், புறனடையின்றி என்றுந் தொடர்ந்து வரும் தேவையானதாயிருக்கிறதென்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? திட்டமாக அதேபிரகாரம் உண்மையைத் தேடுதலைப் பொறுத்த வகையிலும் இடையீடின்மையை நோக்கமாகக் கொள்ளவேண்டும். ஒரு தடவை மனம் தன் இயக்கவழியில் அபிமானத்தின் தொடுதலை உணர்ந்தபின் – அக்கண நேரத்தை நீங்கள் கிரகிக்கக் கூடியதாயிருந்தால் மட்டும் - அப்பரம நேரத்தில் எல்லா நேரங்களும் உட்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் அதை நீங்கள் கைப்பற்றிக் கொண்டபோது எல்லா நேரங்களும் உங்களுடையனவாகும்.

உதாரணமாக புலர்காலை, நடுப்பகல், அந்தி வேளையில் சந்திப்பு நேரங்களை (சந்திக்ஷன) எடுங்கள். அவைகளில் வருதலும் போதலும் சந்திக்கும் சம்யோக நிலையின் இயல்பான சக்தி வெளியீடாகிறது. 'மின் வெடித்தல்' என்று நீங்கள் சொல்வது ஈர் எதிரான வற்றின் சேர்க்கையன்றி ஒன்று மில்லை – அவ்வாறே பரம்பொருளும் சம்யோக நேரத்தில் திடீரென்று மனதிற்றோன்றுகிறது. உள்ளபடி அது ஒவ்வொரு தனிக்கண நேரத்திலும் உடனிருக்கிறது. ஆனல் நீங்கள் அதை எப்போதும் தவறவிடுகிறீர்கள். எனினும் இதையே நீங்கள் அகப்படுத்தவேண்டியது. எதிரானவை ஒன்ருக உருகும் சமையத்தில் அது செய்யப்படலாம், யாரேனும் குறிப்பிட்ட தனியனுக்கு இம் முக்கியமான கணநேரம் தன்னை எப்போது வெளிப்படுத்துமென்று முன்னறிவிக்கத் தக்கதாயில்லை. ஆகையால் இடையருமல் விடாது முயற்சிக்கவும்.

அப்பெருங் கண நேரம் யதார்த்தமாக எது என்பது ஒவ்வொருவருக்கும் அவனின் குறிப்பிட்ட அணுகைவழியைப் பொறுத்துள்ளது. நீங்கள் பிறந்த கண நேரம் உங்கள் முழு வாழ்வின் வழியை நிச்சயித்து ஆளவில்லையா? அதே மாதிரியாக உங்கள் உண்மைப் பொருளின் அசைவு, முற்போதல், அதாவது பெரும் யாத்திரையாகிய ஓட்டத்தினுள் நீங்கள் நுழையும் கண நேரமே உங்களுள்



முக்கியம். இது நிகழ்ந்தாலொழிய நிறைவு அடையப்படமுடியாது. இதுவே சில சீடர்களுக்கு ஒரு புலர்காலை, அந்திவேளை, நடுப்பகல், நள்ளிரவு போன்ற விசேட நேரங்களைச் சாதனைக்கு நிச்சயிப்பதின் காரணம், இவையே வழக்கமாக நியமிக்கப்படும் நாள்கு காலப்பகுதிகள். நாடுபவனின் மனப்பாங்கினதும் முற்சார்பினதும் பிரகாரம் மாறுபடும் குருவின் கட்டளைகளை நேர்மையாகச் சாதிக்கவேண்டியது சீடனின் கடமை. ஒரே ஒழுங்கு ஒவ்வொருவருக்கும் பொருத்தமாயிருப்பதில்லை. பொது மனிதன் இதுவரை கவனிக்கப்படாத தன் இருப்பின் பகுதிகளை நிறைவாக்குவதற்குத் தேவையான குறிப்பிட்ட மூலக் கூறுகளின் சேர்க்கையறிவை வைத்திருக்க முடியாது. இக்காரணமாகக் குருவின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிவது முக்கியமாயுள்ளது. உங்கள் மன நோக்காலும் உங்கள் வினைகளாலுங் கூட நீங்கள் அதற்கு ஆயத்தமாயிருக்கும்போது முடிவான கண நேரம் வெளிப்படக் கடமைப்பட்டுள்ளது. ஆகையால் குருவால் தெரிவிக்கப்பட்ட பாதையைத் திட்டமாகப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள். எங்ஙனம் ஒவ்வொரு விஷயமும் தானுகவே பொருத்தமாக நிகழ்கிறதென்பதைக் கவனிப்பீர்கள்.

நாளின் 24 மணித்தியாலத்தில் ஏதோ ஒரு காலம் நியதமாகக் கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்யப்படவேண்டும். சாத்தியமாயின் ஒரு தனியாசனத்திலிருந்துகொண்டு ஒரு குறிப்பிட்ட நாம அல்லது மந்திர ஜபத்தில் ஒழுங்காக ஈடுபடுவதாக மனவுறுதி கொள்ளுங்கள் படிப்படியாகக் காலத்தை அல்லது ஓதுந் தொகையைக் கூட்டுங்கள். தினசரி கூட்டுதல் தேவையில்லை. நீங்கள் மிகுதிப்பாடாக்கும் விதத்தையும் இடைவேளையையும் நியமித்துக் கொள்ளுங்கள். பட்சம் அல்லது வாரத்திற் கொருதரம் என்று அங்கீகரிக்கலாம்.

இம் முறையாக உங்களை, கடவுளை நாடலுக்குக் கட்டுப்படுத்துங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் அவரிடம் தஞ்சம் புகுங்கள். அவரே உங்கள் அடைவாய் இருக்கட்டும். இம் முயற்சியின் பயனுக நீங்கள் அவ்வோட்டத்தில் ஆழ்ந்து தோய்ந்தவராகி என்றும் அதற்கு அதிக நேரம் ஒதுக்கும்போது நீங்கள் குணமாற்றம் அடைவீர்கள். உங்கள் புலன் மகிழ்ச்சி நாட்டம் நொய்மையடையும். இவ்வாறு நீங்கள் உங்கள் சேகரித்த முயற்சிகளின் பலனைப்

பெறுவீர்கள். உடம்பு எந்நேரத்திலும் இறக்கக் கூடியது, மரணம் எக்கண நேரத்திலும் வந்து சேரலாம் என்பதை நீங்கள் உணரவும் நேரிடலாம்.

உலகில் என்றும் புதுப் படைப்பு இருப்பது போன்று அதற்கு உங்கள் மானசிக, அத்தியான்ம எதிர்த்தாக்கல் இடையறாத மாற்றம் படுகிறது. சுட்டிக்காட்டிய வகையில் நீங்கள் முன் சென்றால், அதன் பயனாக உங்கள் வெளி ஈடுபாடுகள் படிப்படியாகத் தேய்ந்து மாயும். மேலும் உன் பார்வை அகமுகமாகத் திரும்பும். எவ்வளவுக் கெவ்வளவு உங்கள் நாட்டம் தீவிர தரமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு உங்களுக்குத் திறக்கப்படும் சாத்தியங்களும் அளவிறந்ததாயிருக்கும். மேலும் உங்கள் முன்னேற்றத்திற்குத்தக்க வீதம் துன்பம் குறையும். மறுபடியும் பெருகமாட்டாது. கர்மம் கர்மத்தால் அழிக்கப்படுகிறது. — அதாவது கழிந்த வினைகளின் விளைவுகள் எதிர் வினைகளால் மட்டுப்படுத்தப்படுகின்றன — என்றுங் கூடச் சொல்லப் பட்டிருக்கிறது, அப்படியல்லவா? யாரேனும் ஒருவனின் விதி அவ்வாறாயின் உண்மையாக இது மிகக் குறுகிய காலத்தில் எய்தப்பெறலாம். சிந்தித்துப்பார், உடம்பு உணவு கொடுக்கப்படா திருக்கும் போதுங்கூட அது ஊட்டத்தைத் தன் வயப்படுத்துதலை நிற்பாட்டுவதில்லை. அப்படியான சந்தர்ப்பத்தில் அது தன் சொந்தச் சதையை அழிக்க ஆரம்பிக்கிறது. ஆகையால் உங்கள் உடம்பை நன்றாக ஊட்டி வைத்திருப்பது போல் உங்கள் ஆன்மிக அபிவிருத்தியைப் பொறுத்தளவில் நீங்கள் சமமாக நற் சாவதானம் எடுக்க வேண்டும். அப்போதுமாத்திரம் நீங்கள் அவ்வகையில் செழித்தோங்குவீர்கள். எக்கண நேரத்தில் ஒளிர்வாகிய அனற்பிளம்பு பிரகாசிக்குமென்று யார் சொல்லமுடியும்? இக்காரணம் பொருட்டு உங்கள் முயற்சிகளைத் தளர்ச்சியின்றி விசுவாசமாகத் தொடர்ந்து செய்யுங்கள். படிப்படியாக நீங்கள் அவரில் மேலும் மேலும் ஆழமாக இலயப்படுவீர்கள். அவர் அவர் மட்டுமே. உங்கள் எண்ணங்களினதும் மனவெழுச்சிகளினதும் முழுக்கவனத்தையும் முகர்வார். ஏனெனில் மனம் தனக்குத் தகுந்த ஆதாரம் தருவதை எப்போதும் நாடுகிறது. இது பரம் பொருளைத் தவிர வேறேதேனும் ஒன்றால் அளிக்கப்பட முடியாது. அப்போது உங்கள் ஆன்மாவை நோக்கிச் செல்லும் ஒழுங்கின் பிரகாரம் நீங்கள் செலுத்தப்படுவீர்கள். எவ்வளவுக் கெவ்வளவு நீங்கள் அகவாழ்வில் மகிழ்வுறு



கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு புற விடயங்களில் நீங்கள் குறைவாக மனங் கவரப் படுகிறீர்கள் என்று கண்டுபிடிப்பீர்கள். அதன் பயனாக ஆன்மாவுடன் தன் அனன்னிய அநுபூதி எக்கண நேரத்திலும் நிகழும் வண்ணம் மனம் செம்மைவகை உணவால் நன்றாக ஊட்டம் பெற்றதாகிறது.

இலயத்தைப்பற்றி அதற்குள் மனதில் ஒடுக்கத்தைக் கருதினீர்களாயின் நீங்கள் சொன்னது சரியே. ஜட சமாதி விரும்பத்தக்கதன்று. மாறாக, மனம்யாது, யார் அது என்று நீங்கள் நிச்சயிக்க வேண்டும். மனம் அதற்குள் அடங்குகிறது — இது தானே நீங்கள் வெளியிடக் கருதினீர்கள். இலயம் என்பது மனம் ஒடுங்குவதற்கு ஓரிடமுமில்லை. அதாவது மேலும் அதன் வழியைக் கண்டுபிடிக்க முடியாது என்று பொருள்படலாம். இதனால் உள்ளார்ந்தமாக ஒடுங்குகிறது. அன்றேல் தன் வெளிப்பாடாகிய அதற்குள் ஒன்றாகிறது, இரண்டறக்கலக்கிறது. அதன் பயனாக மனதின் தனி இருப்பு சாத்தியமானதாயிருக்க முடியாது. தன் வெளிப்பாடு இருக்குமிடத்தில் எங்ஙனம் மனம் ஒழிகிறதா அன்றா என்னும் வினா எவ்வகையிலும் எழக்கூடும்?

எந்நோக்கும் நிலையிலிருந்து வினாவினீர்களோ அந் நிலையிலிருந்தே இப் பதில் தரப்பட்டிருக்கிறது. எப்படி ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தியானிப்பது முழுமையைத் தியானிப்பதற்குச் செலுத்துமென்று வினாவுதலுடன் ஆரம்பித்தீர்கள். ஐயமின்றி முழுமை பகுதியில் உட்கொண்டிருக்கிறது. இவ்வுண்மையின் அநு பூதியை யடைவதன் வண்ணம் நீங்கள் குருவின் சக்தியுடன் இயற்கையானதாயிருக்கின்ற போதனைகளைப் பின்பற்ற வேண்டும். முன் கூறப்பட்டது முழுச் செய்தியினதும் ஒரேயொரு நிலையின் அற்ப கருத்தை மாத்திரம் தருகிறது.

மேலும் ஒருவர் தியானத்திலிருக்கும் வேளையில் உணர்வை இழந்து விடுகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். சில மக்கள் மகிழ்ச்சியால் ஆவேசங் கொண்டு தாம் மயக்கமடைவது போலும் எதிர்ப்பட்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் மிக நெடுங்காலம் இருந்திருக்கிறார்கள். இந் நிலையிலிருந்து மீண்ட பொழுது ஏதோ ஒரு விதமான திவ்விய இன்பம் அனுபவித்ததாய் உரிமையாடுகிறார்கள். ஆனால் நிச்சயமாக

இது அனுபூதியன்று. தியானத்தில் மிக மகிழ்ச்சியுணரும் ஒரு தசை உண்டு. ஆங்கு ஒருவர் அதில் மூழ்கியது போன்று இருக்கிறார். ஆனால் யாது மூழ்கப்படுகிறது? நியதமாக மனமே. ஒரு குறிப்பிட்ட படியிலும் சில சூழ் நிலைகளிலும் இவ்வனுபவம் ஒரு தடையாகலாம். அடிக்கடி இந் நிலை ஏற்பட்டால் ஒருவர் அக்குறிப்பிட்ட படியில் தங்கக்கூடும். அதன் விளைவாக பொருள்களின் உள்ளுறைத் தன்மையின் சுவையைப் பெறுவதிலிருந்து தடுக்கப்படலாம்.

ஒரு தடவை உண்மையான தியானம் ஏற்படுத்தப் பட்டதும் உலகியற்கவர்ச்சியூட்டும் பொருள்கள் தம் கவர்ச்சியாற்றல் அனைத்தையும் இழக்கின்றன. பரம்பொருள் அல்லது ஆன்மாவைப் பற்றிய ஏதேனும் ஒன்றின் அனுபவம் நிகழ்ந்தால் ''யான் எங்கிருந்தேன்? அந்நேரத்தில் நான் யாதொன்றும் அறியவில்லை'' என்று ஒருவர் சொல்வதில்லை. அங்கு 'அறிகிறதில்லை' என்ற மாதிரியான விஷயம் இருக்க முடியாது. ஒருவர் அனுபவித்த இன்பத்தைச் சொற்களால் விவரிக்க முடியுமாயின் அது இன்னும் இன்பநுகர்ச்சியே — ஆகையால் ஒரு தடையே. ஒருவர் முற்றாக உணர்வுக்குரியவராயிருக்க வேண்டும். மயக்கம் அல்லது யோக நித்திரை கொள்வது ஒருவரை ஓரிடத்துக்கும் வழி நடத்தாது.

உண்மையான தியானத்திற்குப்பின் உலக இன்பங்கள் கவர்ச்சியற்றதாய், எழுச்சியற்றதாய், முற்றாகச் சுவையற்றதாயிருக்கின்றன. வைராக்கியம்என்னத்தைக் குறிப்பிடுகிறது? அதிர்ச்சியிலிருந்து பின்வாங்குவதுபோல் ஒருவரைப் பின்வாங்கும் வண்ணம் ஒவ்வொரு தனி உலகப் பொருளும் தியாகமாகிய நெருப்பைக் கொழுத்துமாப்போலிருக்கும் போது அகம்புற விழித்தல் ஏற்படுகிறது. அப்படியாயினும் உலகப்பொருள் ஏதேனினும் வெறுப்பு அல்லது புறக்கணிப்பை வைராக்கியம் குறிப்பிடவில்லை. அது உள்ளவாறாக ஏற்கத்தக்கதன்று. உடல் அதை மறுக்கிறது. வெறுப்போ சினமோ எழமாட்டாது. வைராக்கியம் இயக்கமுள்ள ஊக்கமாயாகும் போது ஒருவர் உலகத்தின் உண்மையியல்பைப் பிரித்தறியத் தொடங்குகிறார். இறுதியாக நேர்க்காட்சியின் உணர்ச்சி மிகுந்த பணிவுடன் அதன் போலித்தன்மையின் அறிவு எழுகிறது. உலகுக்குரிய ஒவ்வொரு பொருளும் எரிவது போற் தோன்றுகிறது. ஒருவர் அதைத்தொடமுடியாது. இதுவும் ஒரு குறிப்பிட்ட தறுவாயில் நிகழக்கூடிய நிலையே. — தொடரும்



# முத்தீச் செல்வம்

(மட்டுநகர். ஏ. பாக்கியமூர்த்தி ஆசிரியர்)

நம் பண்டைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த சொரூபியாகிய எல்லாம் வல்ல எம் பெருமானை அவன் குணங்களுக்கும் செயல்களுக்கும் ஏற்றவாறு ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய அனல் வடிவில் வைத்து வணங்கி வந்தனர். இவ்வனல் வழிபாட்டிற்குப் பழம் பெருஞ் சான்றுகள் பலவுள்ளன. அவற்றை மறைமலையடிகள் போன்ற பல பெருமக்களின் கூற்றைக் கொண்டு இக் கட்டுரையில் ஆராய்வாம்.

''கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

என்னும் தொல்காப்பியரின் கூற்றுப்படி ஞாயிறு, தீ, திங்கள் என்னும் கட்புலனாகும் ஒளியுடைப் பருப் பொருட்களை, அவை கடவுளினியல்போடு ஒத்திருப்பன கண்டு நம் பண்டையோர் கடவுளென மதித்தமை கண்கூடு. இம் மூன்றையும் இறைவனுக்கு முக் கண்களாகப் போற்றிப் புகழ்ந்து வந்திருக்கிறார்கள். இதனாலன்றோ நம் முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை 'முக்கட் செல்வர்' 'முக்கண்ணன்' என்றெல்லாம் நம்மவர்கள் அழைக்கின்றனர்.

''அருக்கனிற் சோதியமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன்''

என்று திருவண்டப் பகுதியில் திருவாதவூரடிகள் இயம்பியிருப்பதையும் காண்மின்கள்.

கொடிநிலை கந்தழி வள்ளி என்னும் இம் மூன்றினுள்ளும் நடுவணுள்ள கந்தழி என்னும் தியானது முற்றிலும் கடவுளியல்புக்குப் பொருத்தமானதேயாகும். தீயை நம்மனோர் கடவுளியல்புக்கு ஒப்பதாகக் கண்டு வழிபட்டது என்னையெனின் கூறுதும். நிலமும் நீரும் கண்ணுக்குத்தோன்றும் பருப் பொருட்களாக இருந்தாலும் அவை பிற ஏதுக்

களின் சேர்க்கையால் தூய்மை கெடக் கூடியன. அதே போல் வளியும் வானும் கட்புலனுகாத பருப் பொருட்க ளேயானுலும் அவையும் பிற ஏதுக்களால் தூய்மை கெடக் கூடியன. ஆனுல் தீயோ தூய்மை யல்லாத பிற பொருட் களைத் தூய்மையாக்குவதோடல்லாமல் தானும் தூய்மை கெடாது, தன்னிலமை மாருது நிற்பதை நாம் காணலாம். இவ்வாறே இறைவனும் தூய்வன வல்லாத ஆன்மாக்களைத் தூய்மைப் படுத்தி அவற்றைத் தன் வயமாக்கித் தான் மாருது நிற்கிருன். அத்தோடல்லாமல் இறைவனுக்கு இயல்பாகவே யுள்ள அருவம், உருவம், அருவுருவம் என் னும் இம் மூன்று தன்மைகளும் அனலின்பாலுள்ளன.

அனல் பிற பொருட்களோடு சேர்ந்திருக்கும் போது கட்புலனுகாமல் அருவமாய்க் கிடக்கிறது. இரண்டு கட் டைகள் வெவ்வேருய்க் கிடக்கும் போது அவற்றில் அமைந் துள்ள அனலின் தன்மை புலனுவதில்லை. ஒன்றையொன் ருேடு தேய்த்ததும் அது கட்புலனுவதைக் காணலாம். இறை வனும் இவ் வுலகத்துப் பொருட்கள் எல்லாவற்றிலும் உள்ளும் புறமுமாக நின்று இயக்குகிருன். இதைச் சம்பந் தப் பெருந்தகை

''விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்''

என மிக அழகாகக் கூறுகிருர். விறகிற் றீயினனுய் நிற்கும் அவன் செயல் அருவத் திருமேனியைக் காட்டுகி றது. அனல் எரியும் போது கட்புலனுகத் தோன்றுகின் றது. அவ்வாறே இறைவனும் மெய்யடியார்கள் பொருட் டுத் தன் திருக்கோலத்தைக் காட்ட எழுந்தருளி வரும் போது தன் திருவுருவத் திருமேனியைக் காட்டுகின்ருன். அனல் கட்புலனுகத் தோன்றினுலும் அதைக் கையால் தொ டவோ பிடிக்கவோ முடியாமல் இருப்பதால் அது இறை வன் தன் அருவுருவத் திருக்கோலத்தை ஒப்பதாக இருக் கிறது.

தீக் கொழுந்தில் பரந்த செவ்வொளியும் அதால் சூழப் பட்ட சிறு நீல ஒளியையும் நாம் காணலாம். வெம்மை யான செவ்வொளியை ஆண்டன்மை பொருந்திய சிவனு கவும், குளிர்ச்சியான நீல ஒளியைப் பெண் தன்மை பொ ருந்திய சக்தியாகவும் கொண்டு வழிபாடாற்றினுர்கள்.

இறைவன் தன் மெய்யன்பர்கட்கு அனல் வடிவாகவே காட்சியளித்திருக்கிருன் என்பது அன்னுர்களின் திருப்பா



டல்களால் பெறப்படுகிறது. திருவாசகத்தின் கண்ணே மாணிக்கவாசகப் பெருந்தகை

''மொக்கனியருளிய முழுத்தழல் மேனி
சொக்கதாகக் காட்டிய தொன்மையும்'' என்றும்

''திருவார் பெருந்துறைச் செல்வனுகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்'' என்றும்

''அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்(டு)'' என்றும்

''மூலமாகிய மும்மலம் அறுக்குந்
தூய மேனிச் சுடர் விடு சோதி'' என்றும்

கீர்த்தித் திருவகவலில் கூறியிருப்பதும் அப்பரடிகள்

''அங்கமலத் தயனெடு மாலுங்காணு
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி''

என்று புகழ்ந்திருப்பதும் உய்த்துணரற் பாலது.

ஞாயிறு, தீ, திங்கள் என்னும் மூவகை ஒளியுடைப் பொருட்களையும் தங்கள் அருகிலேயே வைத்து வணங்க விருப்புக்கொண்ட நம் மூதாதையர் தாம் வாழ்ந்த இடங் களில் முத்தீ வளர்த்து வழிபடலாயினர். ஞாயிற்றுக்குப் பதிலாக வட்ட வடிவத்திலும் தீக்குப் பதிலாக முக்கோண வடிவத்திலும் திங்களுக்குப் பதிலாகப் பிறை வடிவத்தி லும் குழிகள் வெட்டி அதில் தீ வளர்த்து அத்தீக்கு நெற் பொரியும் மலர்களும் தூவி நெய் வார்த்து வழிபடலாயி னர். இவ்வாறு முத்தீ வளர்த்த செய்தியை முதற் சங்க காலப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் பெரும் புலவர் புறநானூற்று இரண்டாம் செய்யுளில்

''......சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற் கோட்டிமயமும் பொதியமும் போன்றே''

என்று இமயம் முதல் பொதியம் வரை இவ் வழி பாடு நடந்ததைக் கூறுகின்றார்.

"மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீர தேவர் பாடிய வாற்றானும் அறியக் கிடக்கிறது. இம் முத்தியையே வட நூலார் ஆகவநீயம், சாருக பத்தியம், தக்ஷிணாக்கினி என வழங்குவர்.

தங்களால் வழிபடப்படும் அனலை அபிடேகித்தும் மலர் மாலை சாத்தியும் தொட்டும் தூக்கியும் வழிபட விரும்பிய சான்றோர், அவ்வனலைப் போல்வதான ஓர் உருவை உண்டாக்கினர். அத்திருவுருவே சிவலிங்கமாகும். சிவலிங்கத்தின் நீண்டு குவிந்த பாகம் தீக்கொழுந்தின் வடிவத்தையும், வட்டமான பாகம் தீக்குழியையும் குறிப்பதாகும் என்பதையும் நம் முன்னோரின் ஒளி வழிபாட்டிற்கு அடையாளமாக இன்றும் அச்சிவலிங்கத்திருவுருவுக்குத் தீபாராதனைகள் காட்டப்படுகின்றன என்பதையும் மறைமலையடிகள் தனது ஆராய்ச்சி நூல்களிற் கூறிப் போந்துள்ளார்கள்.

சைவப் பெருமக்களுடைய தீக்கடவுள் வழிபாட்டைப் பிற மதத்தவர் உண்மை விளங்காது கேலி செய்வது அவர்களின் அறிவின்மையேயாகும். அந்தோ பரிதாபம். புறவிருளை அகற்ற ஞாயிறு, தீ, திங்கள் என்னும் ஒளியுடைப் பொருட்கள் எவ்வாறு மனிதனுக்கு உதவுகின்றனவோ, மனிதன் கொடிய அக இருளாகிய அகங்கார மமகாரங்களை அகற்ற இறைவனின் அருளொளி வேண்டற்பாலதான தொன்றாகும். அருளொளி பெற்று அகவிருள் நீக்கிய மணிவாசகப் பெருந்தகை

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை..... " என்று

இறைவனை மனத்தின் கண்ணே உதயமாகும் கதிரவனுக்கு ஒப்பிட்டமை காண்க. சிவஞானமாகிய தீபம் அகத்திலே ஏற்றப்பட்டால் நாம் சிவத்தைக் காணலாம். எனவே நம் பண்டைச் சைவத் தமிழ்மக்கள் ஒளிவடிவிலேயே இறைவனை வழிபட்டனர். "சோதியே சுடரே, சூழொளி விளக்கே, சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதியே" என்று போற்றினர்; பேரின்ப மடைந்தனர். அவர்கள் சென்ற வழியே நாமும் சென்று பேரின்ப மடைவோமாக.

"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமதாவது உணர்கிலார்
அரி அயற்கு அரியானை அயர்த்துப் போய்
நரி விருத்தம தாக்குவர் நாடரே" —அப்பர்.

---

# கருணை செய்வாய் கந்தனே

(சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி)

| | | | |
|---|---|---|---|
| இராகம்:— சண்முகப்பிரியா, | ஆ. ஸரிசமபதநிஸ் | } | 56வது |
| தாளம் :— ஆதி, | அ. ஸ்நிதபமகரிஸ | } | மேளகர்த்தா |

பல்லவி

கருணை செய்வாய் கந்தனே கயிலைமலை
ஈசன் தந்த மைந்தனே கதிர் காமனே

அநுபல்லவி

அரிய சென்மமிதனை அவமாய்க் கழித்திடாமல்
அல்லும் பகலு முனக் கன்பு செய்து வாழவே (கருணை)

சரணங்கள்

மண் பெண் பொன்னாசையினில் மயங்க விடாதே
மறலியை யெந்தனிடம் அணுக விடாதே
பண்டு செய் பவ வினை நீக்கிடு வாயே
பாற்கடலோன் மருகா வேற்கரனே குமரா (கருணை)

பக்குவ நிலை வருங் கால மென்றோ வென்று
பதைக்கின்றேன் பேதையேன் பல சென்ம மெடுத்திட்டேன்
விக்கினந் தீர்க்கு மானை முகக் கடவுள் சோதரா
வீர சூர சங்கரா வள்ளி நாயகி நாதா (கருணை)

குத்திரனெத்தன் கடுஞ்சின மத்தருணம் பொறையற்ற னகந்தையுளன்
இத்தகை மற்கடகத்தொடு புவிதனில் நித்த மிடர்ப்படுதல் தகுமோ
பத்தி பழுத்திட நித்தம் நினைத்திடு பத்தர் களிப்புற முத்தியருள்
சத்திய நித்திய சங்கரி புத்திரி சற்குரு நீ சிவ சண்முகனே (கருணை)

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300


## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | 1—25 |
| வழிபாடு | | —25 |
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1—50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | —75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | —50 |
| தீங்கனிச்சோலை | ,, | 2—50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | —65 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2—25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | 3—00 |
| கீதாயோகம் | ,, | 2—50 |
| கந்தரநுபூதி — பொழிப்புரையுடன் | | —25 |
| மார்கழிப் பாடல் | | —20 |


## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்றுவரை 15ம் ஆண்டுக்குரிய சந்தா அனுப்பியவர்களுக்கு உடனுக்குடனேயே ரசீது அனுப்பியுள்ளோம். அவர்களுக்கெல்லாம் எமது நன்றி உரித்தாகுக. இன்று வரை சந்தா அனுப்பாதோர் உடனே அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

(சிலோன்.)

போன்;— 353.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்—9. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.


## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு மலக்கட்டு, மபெந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்.

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் — அரிசிப் பாளையம்சேலம் 9 (S I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.


இப்பத்திரிகை ஆத்மஜோதிநிலையத்தாருக்காக ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா. விநயகமூர்த்தியால் அச்சிட்டுவெளியிடப்பெற்றது. 15-5-63.